# ஒரு வழியை உண்டுபண்ணுதல்

மாலை வணக்கம், நண்பர்களே. கர்த்தர் உங்களை முழுநிறைவாக ஆசீர்வதிப்பாராக. சகோதரன் நெவில், அந்த அன்பான கருத்துக்காக, உங்களுக்கு நன்றி. இன்றிரவு கூடாரத்திற்கு திரும்பி வந்து, நம்முடைய ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தரின் ஆராதனையில், இன்றிரவு வெளியே உள்ள நம்முடைய நண்பர்களைக் காணவும், நம்மோடு அவரைத் தொழுதுகொள்ளவும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

2 கர்த்தருடைய வருகையின் இந்தப் பக்கத்தில் இன்னும் ஒருமுறை சந்திப்பது நிச்சயமாகவே ஒரு மகத்தான சிலாக்கியமாய் உள்ளது. அநேகர் எதிர்பாராதவிதமாக, மிகத் துரிதமாகப் பிரிந்து செல்வதை நாம் காண்கிறோம், கேட்கிறோம், அடுத்தது யார் என்று நாம் மீண்டும் மீண்டும் யோசிக்கிறோம். ஆனால், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட உறுதியை உடையவர்களாய், அதாவது… "கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது. மரணமானாலும், நிகழ்காரியங்களானாலும், அல்லது எதிர்காலமோ, அல்லது வல்லமைகளானாலும் நம்முடைய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது." "இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்துபோன பிறகு, நமக்கு ஏற்கனவே ஒன்று காத்திருக்கிறது" என்று இதை அறிந்திருக்கிறோம். உறுதியற்ற, நிலையற்ற; மிகவும் மகிமையான அந்த நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்தின் மேல் நாம் சார்ந்திருக்கிறோம்.

3 நான் என் மனைவியிடமும், திருமதி உட் அவர்களிடமும் பேசிக் கொண்டிருந்தேன்…நான் திரும்பி வந்தேன். நான், "சரி, இது பயணத்திற்குப் பின் பயணம் என்பது போலவும், ஒரு இடத்திற்குப் பிறகு மற்றொரு இடமாகவும் இருப்பது போல் தெரிகிறது, ஆனால், அதே சமயத்தில், அவர்கள் அதிக மகிமையுள்ளவர்களாக மாறினர். நான்….நாம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், கர்த்தருடைய வருகை அருகாமையிலுள்ளது என்பதை அறிகிறேன்." நான், "சரி…" என்றேன்.

4 அன்றொரு நாள் என்னுடைய பையனிடம், தெற்கு டகோட்டாவிலுள்ள சியோக்ஸ் நீர்வீழ்ச்சியிலிருந்து சாலையில் வந்துகொண்டிருந்தபோது பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது நான், "உனக்குத் தெரியும், வீடு ஒரு அற்புதமான இடமாயிருக்கிறது" என்றேன். நாங்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தோம்.

நான், "நாங்கள் இந்த உலகத்தை நேசிக்கிறோம். இது நம்முடைய வீடாயுள்ளது. நாம் இதை அவ்வாறு நினைக்காமலிருக்கலாம், ஆனால் இது அவ்வாறு உள்ளது. நாம் இந்த வீட்டிற்காகவே பிறந்தோம். இது, தேவன் நம்மை இங்கே வைத்துள்ளார். நம்மை இங்குக் கொண்டு வர நமக்கு வழியே இல்லாதிருந்தது. நம்முடைய தகப்பனும் தாயும் கூட ஒரு வழியே இல்லாதிருந்தனர். அது தேவனுடைய கரங்களில் இருக்க வேண்டியதாயிருந்தது. அநேக ஜனங்கள் விவாகமாகி, குழந்தையே இல்லாதவர்களாக இருக்கின்றனர். ஆனால், நாம் இந்தப் பூமிக்கு வரக்கூடும் என்று தேவன் அப்படியே கண்டார்.

5 அதன்பின்னர் நாம் வரும்போது, நாம் அணுக்கள், ஒளிகள் போன்றவற்றின் மூலமாக ஒரு சரீரத்திற்குள்ளாக வளர்ந்து உருவாகத் துவங்கி, அது பூமியிலிருந்து எடுக்கத் துவங்கினது. அதன்பின்னர் நாம் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பிறகு, அவைகள் வளர்வதை நிறுத்திவிட்டன. நாம் இன்னும் அவைகளை நம்மோடு சேர்த்துக் கொள்கிறோம், ஆனால் அவைகள் விலகிச் செல்கின்றன. மரணம் உள்ளே வந்துவிட்டது.

6 "இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்து போகும்போது, அங்கே நமக்கு ஒன்று காத்திருக்கிறது." புரிகிறதா? நாம் அதற்குள் பிரவேசிக்கிறோம், நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்வோம். நாம் கரங்களைக் குலுக்க முடியாது; அந்த உணர்வின் புலன்கள் நமக்குக் இருக்காது. நம்மால் முடியாது…என்னால் உங்களுடைய கரத்தைக் குலுக்கி, "சகோதரனே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்" என்று கூற முடியாது, ஏனென்றால் நான்—நான்…உங்களுக்கு அந்த விதமான கரம் இருக்காது. ஆனால், அதே சமயத்தில், நாம் இப்பொழுது உள்ளதுபோல, நாம் ஒரு மாம்ச சரீரத்தில் அல்ல, நாம் ஒரு—ஒரு வானத்துக்குரிய சரீரத்தில் இருக்கிறோம். அதன்பின்னர் இந்த…

7 நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன், எகிப்தில், யோசேப்பு இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு நினைவுச் சின்னத்தை விட்டுச் சென்றபோது, அவனுடைய எலும்புகள், என்றோ ஒரு நாள் அவர்கள் வெளியே செல்லவிருந்தனர். அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது, அவனுடைய எலும்புகளை அவர்களோடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு எபிரெயனும் தாய்நாட்டிற்கு திரும்பி வர விரும்பினான், எனவே அவன் எவ்வளவு நன்றாக நடத்தப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, அதே சமயத்தில் அவனுடைய வாஞ்சை திரும்பவும் தாய்நாட்டிற்கு வர வேண்டியதாயிருந்தது. ஒவ்வொரு முறையும் அவர்கள் கடந்து சென்று, அந்த எலும்புகளைக் கண்டபோது, என்றோ ஒரு நாளில் அவர்கள் தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்லப் போகிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

8 நாம் இங்கே இருக்கையில், இந்த இடத்தை விட்டுக் கடந்து

செல்லக் காத்திருக்கையில், அங்கே எருசலேமில் உள்ள ஒரு காலியான கல்லறை நாம் காண்கிறோம், ஏதோ ஒரு காரியம் சம்பவித்தது என்பதை நாம் அறிந்து கொள்வோமாக. அதன்பின்னர் நாம் அந்த மகிமைப்படுத்தப்பட்ட…மகிமைப்பட்டதல்ல, ஆனால் வானத்தின் சரீரத்தை எடுத்துக் கொள்ளும்போது, நாம் கிறிஸ்துவோடு மகிமையான தேசங்களில் சுற்றி நடந்து, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்து, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்கிறோம்; நாம் பேச முடியும். பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள், "எவ்வளவு காலம்?" என்று கதறுகின்றன. நாம் புசிக்கவும், குடிக்கவும், உறங்கவும் மீண்டும் பூமிக்கு வரப்போகிறோம் என்பதற்கு, அங்கே நினைவுச்சின்னம் என்னவாயிருக்கும்? அவர் அங்கே ஒரு சிங்காசனத்தின் மேல், ஒரு மாம்சப்பிரகாரமான சரீரத்தில் வீற்றிருப்பார். ஆமென்.

9 என்றோ ஒரு நாள் அவர் அந்தச் சரீரப்பிரகாரமான சரீரத்தில் உயிர்த்தெழுவார். அவர் திரும்பி வரும்போது, இந்த வானத்தின் சரீரங்கள் மகிமைப்படுத்தப்படும். அப்பொழுது நாம் அவரைப் போன்று இருப்போம், நாம் அந்தச் சரீரத்தில் என்றென்றும் ஜீவிப்போம். என்ன ஒரு…என்ன—என்ன மற்ற எந்தக் காரியமும் முக்கியம் வாய்ந்ததா? புரிகிறதா? அது ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டது. அது அப்படியே…அங்கே நங்கூரமிட்டது. மேலும் இது…

> இயேசுவின் இரத்தத்தையும் நீதியையும் விட என்னுடைய நம்பிக்கைகள்
> எந்த ஒன்றின் பேரிலும் கட்டியெழுப்பப்படவில்லை;
> என் ஆத்துமாவைச் சுற்றிலுமுள்ள யாவும் கைவிடும்போது,
> அப்பொழுது அவரே என்னுடைய முழு நம்பிக்கையும், தங்குமிடமுமாயிருக்கிறார்.

10 கிறிஸ்துவே அதை சாத்தியமாக்கினவர்; என்னுடைய சபையல்ல, அல்லது என்னுடைய ஸ்தாபனமல்ல, என்னுடைய நண்பர்கள் அல்ல, ஆனால் கிறிஸ்து.

> மற்றெல்லா நிலங்களும் அழிந்துகொண்டிருக்கும் மணலே, மற்றெல்லா நிலமுமே.

11 எடி பெரோனெட்…அவர் பைத்தியம் பிடித்தவர் என்று அவர்கள் நினைத்ததில் வியப்பொன்றுமில்லை. அந்நாளில், ஜனங்களுக்கு ஒரு அடிமையாக அங்கே அமர்ந்து, பரிசுத்த ஆவியானவர் வந்து பேனாவை எடுத்து, அந்த அற்புதமான பாடலை எழுதத் துவங்கினார் இராஜாதி இராஜாவின் பதவியேற்பு விழாவின் இளங்கலை ஆராதனையில் பாடப்படும். *இயேசுவின் நாமத்தின் வல்லமையை எல்லோரும் போற்றுவோம்.*

12 இப்பொழுது வடக்கிலிருந்து வரும் அற்புதமான அறிக்கை. நாங்கள் ஊழியக்காரர்களை உடையவர்களாயிருந்தோம். ஊழியக்காரர்களை அல்ல, ஆனால் மினியாபோலிஸிலுள்ள கிறிஸ்தவ வர்த்தக புருஷருடைய காலைச் சிற்றுண்டி வேளையில்... மேலும் எங்களுக்கு எப்போதும் இருந்ததிலேயே மிகப் பெரிய காலைச் சிற்றுண்டி வேளையாயிருந்தது. இரண்டாயிரம் பேர் வெளியே வந்தனர்.

13 கர்த்தர் நமக்கு ஒரு செய்தியைக் கொடுத்தார். அந்தக் காலையில், பீட அழைப்பில், ஐம்பது வர்த்தக புருஷர்கள் கிறிஸ்துவண்டை வந்து, அந்தக் காலை ஆராதனையில், மீண்டும் பிறந்தனர். ஓ, அது என் இருதயத்தை சிலிர்க்கச் செய்தது, ஒரு வர்த்தகர் உள்ளே வந்தார்! எங்கும், அற்புதமான ஆராதனைகள். கர்த்தர் துதிக்கப்படுவாராக, எல்லா மகிமையும் அவருக்கே!

14 இப்பொழுது நான் இங்கே ஒரு சிறு குறிப்பை வைத்துள்ளேன், அதில், “நான் எப்பொழுது இண்டியானாபோலிஸில் இருப்பேன்?” என்று எழுதப்பட்டிருந்தது. ஜூன் 11-ம் தேதி முதல் 15-ம் தேதிவரை இந்தியானா பொலிஸில் உள்ள காடில் கூடாரத்தில் நடைபெறும், ஜூன் 11 முதல் 15 வரை, பதினோராயிரம் பேர் அமரலாம்.

15 நாளை மறுநாள் நாங்கள் லூசியானாவில் உள்ள ஷ்ரீவ்போர்ட்டுக்கு புறப்பட்டுச் செல்வோம், வார இறுதியில் லூசியானாவில் உள்ள ஷ்ரீவ்போர்ட்டில் அங்கே இருப்போம்.

16 அதன்பின்னர் நாங்கள் ஷ்ரீவ்போர்ட்டை விட்டு டெக்ஸாஸில் உள்ள ஹூஸ்டனுக்குச் செல்கிறோம், திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரண்டு நாட்கள் அங்கே இருக்கும்.

17 அதன்பின்னர் 16-ம் தேதி நாம் பழைய மெக்சிகோவில், மெக்சிகோ பட்டிணத்தில், பழைய மெக்சிகோவில் துவங்குகிறோம். திரு. ஆர்கன்பிரைட் என்னை அழைத்தார். அவர்கள் அறுபதாயிரம் பேர் அமரக்கூடிய பெரிய காளை அரங்கத்தை உறுதி செய்தனர். நானூறு சபைகள் ஏற்கனவே ஒத்துழைத்துக் கையெழுத்திட்டுள்ளன. நாங்கள் கூட்டத்தில் ஒரு லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

18 இது முதன்முறையாக...தேவனைத் துதிக்க நமக்கு ஒரு காரியம் உண்டு. மெக்சிகோவின் சரித்திரத்தில் முதன் முறையாக அரசாங்கம் எப்போதாவது ஒரு பிராடெஸ்டெண்டை வரவேற்று, வருவதற்கான இடத்தை எங்களுக்கு அளித்துள்ளது இதுவேயாகும். மெக்சிகோவின் சரித்திரத்தில் முதன் முறையாக ஒரு—ஒரு பிராட்டஸ்டெண்டுகள் வரவேற்கப்பட்டனர். அந்தத் தளபதி மெடினா, மெக்சிகோ இராணுவத்தின் ஒரு தளபதி, அவர் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார். மெக்ஸிகோ ஆளுநருக்கு அவருடைய மரியாதையினால், இராணுவப்

பாதுகாப்போடு செல்வதற்கான அரசாங்க உரிமைகளை நமக்கு அளிக்கிறது. மேலும் நாம்…

19 எனக்குப் பெரிய காளை அரங்கம் உள்ளது. மெக்சிகோ முழுவதிலும் உள்ள மிகப்பெரிய அரங்கம் அதுதான். அறுபதாயிரம் பேர் இப்படிச் சுற்றி அமரலாம், மேலும் அவர்கள் சண்டையிடும் அறை, உங்களுக்குத் தெரியும், அது உள்ளே இருக்கிறது. நாங்கள் அதை இப்போது பத்து இரவுகள் தொடர்ந்து, எந்தத் தடங்கலும் இல்லாமல் பெற்றிருக்கிறோம், தொடர்ந்து பத்து இரவுகள் தொடர்ந்து நீடிக்கும். எனக்காக ஜெபியுங்கள்.

20 நான் அப்படியே உணர்கிறேன்…அங்கே பெருமழையின் இரைச்சல் கேட்கிறேன். நான் அப்படியே…மெக்சிகோ ஜனங்கள் மிகவும் எளிமையான, தாழ்மையான விசுவாசிகள். ஒருமுறை சம்மதித்துவிட்டால்…அவர்கள் கத்தோலிக்கர்கள். மேலும் ஒருமுறை ஒரு சத்தியம் சத்தியமேஎன்று உறுதியாக நம்பிவிட்டால், அப்பொழுது அதுவே யாவருக்கும் தீர்வாகிறது.

21 அதன்பின்னர், பழைய மெக்சிகோவிலிருந்து துரிதமாகத் திரும்பி, ஏறக்குறைய 30-ம் தேதியன்று இங்குத் திரும்பி வருகிறோம்.

22 1-ம் தேதி, அது ஈஸ்டர் காலை, இங்கே கூடாரத்தில், ஒரு சூரியோதய ஆராதனைக்காக உள்ளது. அதைத் தொடர்ந்து, ஒரு சுகமளிக்கும் ஆராதனை. அன்றிரவு கூடாரத்தில் ஒரு ஞானஸ்நான ஆராதனை. நீங்கள் உங்களுடைய நண்பர்களிடத்தில், இப்பொழுது, அவர்களுடைய வியாதியஸ்தரையும், அவதியுறும் அனைவரையும் ஈஸ்டர் ஆராதனைக்காக அழைத்து வரும்படி கூறலாம். அந்த அதிகாலையில் சூரிய உதய ஆராதனை. அதன்பின்னர், அதைத் தொடர்ந்து வழக்கமான ஞாயிறு பள்ளி நேரப்படி பத்து மணிக்கு ஒன்பது முப்பது மணிக்கு நடைபெறும். நீங்கள் யாவரும் ஞாயிறு பள்ளியை அதன் பேரில் திட்டமிடுகிறீர்கள். அதைத் தொடர்ந்து ஒரு—ஒரு சுகமளிக்கும் ஆராதனை, ஒரு வழ…வழக்கமான சுகமளிக்கும் ஆராதனை நமது பிரச்சாரங்களில் உள்ளது போன்றே.

23 ஆகவே, அப்பொழுது, மெக்ஸிகோ நகரத்தில், முதன் முறையாகக் கர்த்தர் என்னிடம் கூறிய இந்தப் புதிய தரிசனம், அந்த நேரத்தில் செயல்படப் போகிறது. எனவே கர்த்தருக்குச் சித்தமானால், ஈஸ்டர் ஞாயிறு காலை இங்கே இந்த இரண்டு அறைகளையும் உபயோகித்து, மீண்டும் முயற்சிப்போம்…?… இங்கே, பாருங்கள். எனவே நாம் இங்கே ஒரு மகத்தான நேரத்தை, ஈஸ்டர் காலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

24 கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதற்கு அத்தாட்சி, அவர் உயிரோடிருக்கிறார். ஆம், ஐயா. அவர் அந்த முதல் ஈஸ்டர் முதற்கொண்டு உயிரோடிருக்கிறார். இப்பொழுதும் கூட அவர் இங்கே நம்மோடு இருக்கிறார். அந்தக்

காலையில் கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களின் மகத்தான ஊற்றை நமக்கு அளிப்பார் என்று நான் நம்புகிறேன்.

25 பிறகு நாங்கள் செல்கிறோம்…இங்கிருந்து, பிறகு, நாங்கள் சிக்காகோவிற்கு செல்கிறோம் 11-வது, 3-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதிவரை. நாம் ஒரு திங்கட்கிழமை புறப்பட்டு, அங்கே ஒரு செவ்வாய் கிழமையில் துவங்கி, தொடங்கி…இல்லை, அது 3-ம் தேதி முதல் 8-ம் தேதிவரை உள்ளது. அதன்பின்னர் 11-ம் தேதி நாம் சார்லட்டில்…இல்லை, வட கரோலினாவில் உள்ள கொலம்பியாவில் துவங்குவோம். அதன்பின்னர் வட கரோலினாவிலுள்ள ஸ்பின்டேலுக்குச் செல்ல வேண்டும். அதன்பின்னர் அங்கிருந்து தென் கரோலினாவிலுள்ள சார்லட் என்ற இடத்திற்கு. அதன்பின்னர் அங்கிருந்து அலாஸ்காவில் உள்ள ஆங்கரேஜ்; அலாஸ்காவிலுள்ள ஆங்கரேஜ் என்ற இடத்திற்கு. பிறகு, திரும்பவும். தீர்மானிக்கப்படவில்லை, ஆனால், ஒருக்கால், அதற்குள், கூடாரம் சாலை பயணத்திற்கு ஆயத்தமாகிவிடும். ஓ, நான்…

26 நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் அதற்காக என்னோடு ஜெபிப்பீர்களா? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] பாருங்கள், மிகவும் தாமதமாவதற்கு முன், கர்த்தருக்குச் சித்தமானால், இந்த வீழ்ச்சி நகரத்தில் இங்கே இந்தக் கூடாரத்தை அமைக்க நான் விரும்புகிறேன், அங்கு நான்கு அல்லது ஆறு வாரங்கள் கூட்டங்கள் நடத்தலாம்; யுத்தம் முடிவுறும் வரையில் இங்கேயே இருக்க வேண்டும். நீங்கள் அதற்காக இப்பொழுது ஜெபித்துக் கொண்டிருங்கள். நான் அதை இங்கே ஜெபர்ஸன்வில்லுக்கும் நியூ ஆல்பனிக்கும் இடையே எங்காவது, அதில் ஏறக்குறைய ஏழாயிரம் அல்லது எட்டாயிரம் இருக்கைகள் இருக்கக்கூடிய வசதியுடன் வைக்க விரும்புகிறேன். நாட்கள் செல்லச் செல்ல நாம் இன்னும் அதிகமாகக் கூட்டி, அது தீர்க்கப்படும் வரையில் இங்கேயே தரித்திருக்க முடியும். ஆமென்.

27 அதன்பின்னர், அதன்பின்னர், ஜூன் 11-ம் தேதி முதல் 15 தேதிவரை, இந்தியானாபோலிஸில் உள்ள காடில் கூடாரத்தில் நடக்கும் என்று நான் நினைக்கிறேன். அதன்பின்னர், 17-ம் தேதி, ஜூன் 21 முதல், மின்னியாபோலிஸில் நடைபெறும் என்று நான் நினைக்கிறேன், அங்குள்ள கால்பந்து மைதானத்தில் இருபத்தேழாயிரம் பேர் அமரலாம். அதுதான் கிறிஸ்தவ வர்த்தக புருஷர்களின் சர்வதேச மாநாடு, அவர்கள் ஒவ்வொரு இரவும் பேசுகிறார்கள், மேலும் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கிறார்கள்.

28 இப்பொழுது இவைகளுக்காக ஜெபித்துக் கொண்டேயிருங்கள், கடினமாக ஜெபியுங்கள். இப்பொழுது நமக்கு அதிக நேரம் இல்லை என்பதை நான்—நான் உணருகிறேன். நான் அதை முன்னுரைக்கிறேன்; இதை இப்பொழுது கர்த்தர் கூறுகின்றார் என்று நான் கூறவில்லை. இந்த வருடம் அமெரிக்கா கிறிஸ்துவை

ஏற்றுக்கொள்ளும் அல்லது கிறிஸ்துவை புறக்கணிக்கும் என்று நான்—நான் முன்னுரைத்துக்கொண்டிருக்கிறேன். பார்த்தீர்களா? இது அமெரிக்கா உள்ளே செல்லும் ஒரு திருப்பு முனையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த நாளில் நமக்கு ஒரு எழுப்புதல் இருக்கும், இல்லையென்றால் நமக்கு ஒரு எழுப்புதல் இருக்காது. இந்த வருடத்தில்தான் அமெரிக்கா தன்னுடைய தீர்மானத்தைச் செய்யும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் அதைச் செய்வார்கள் என்றும், நமக்கு ஒரு மகத்தான எழுப்புதல் உண்டாயிருக்கும் என்றும் நான் நம்புகிறேன். நமக்கு அதிகமான பிரசங்கமும், அதிக சுவிசேஷமும் உண்டாயிருக்கிறது, ஆனால் நமக்கு ஒரு எழுப்புதல் தேவை (நமக்கு அவசியமில்லையா?), ஒரு உண்மையான எழுப்புதல். அதுதான் நமக்குத் தேவை. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

29 சகோதரன் கிரஹாம் அங்கே இருப்பதைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன், மேலும்—மேலும் அவருக்கு முன்பாகச் சகோதரன் ஸ்மித் அமர்ந்திருக்கிறார் என்று நான்—நான் நினைக்கிறேன், தேவனுடைய சபையிலிருந்து வந்துள்ள சகோதரன் ஸ்மித். மேலும்—மேலும் இங்கே அநேக ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். சகோதரரே, எங்கள் வாசல்களிலுள்ள அந்நியர்களாகிய, சபையோர் யாவரையும் நாங்கள் வரவேற்கிறோம். நாங்கள் உங்களை நேசிக்கிறோம்.

30 இப்பொழுது இந்த அறிவிப்புகள் முடிந்த நிலையில், இன்றிரவு, இராப்போஜன ஆராதனைக்கான இராப்போஜன ஆராதனை இரவாயிருந்தது என்பதை உணர்ந்து கொள்கிறோம். இங்கே கூடாரத்தில் பொறுப்பைச் சிறப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கும் ஒரு மகத்தான பணியைச் செய்து கொண்டிருக்கிற நம்முடைய அருமையான சகோதரன் நெவில் அவர்களுக்காகவும்; எங்கும் உள்ள எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் கடினமாக ஜெபியுங்கள். ஓ, என்னே ஒரு தேவையுள்ள நேரம்! என்னே ஒரு தேவையுள்ள நேரம்! நான் ஆப்பிரிக்காவிலிருந்து அதைக் கேட்கிறேன், ஆப்பிரிக்காவிற்கான அப்படிப்பட்ட ஒரு அழைப்பு.

31 சகோதரன் ஆர்கன்பிரைட் சற்று முன்னர், தொலைபேசியில் என்னிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தார், அதாவது அங்கே அந்தத் தேசங்களின் இராஜா, அது எங்கே இருந்தது என்பதை நான் மறந்துவிட்டேன், இங்கே ஸ்வீடனில், சுவிட்சர்லாந்தில் என்று நான் நினைக்கிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் நான் அதைப் பெற்றுக்கொள்வேன். டென்மார்க், இந்த நேரத்தில் அங்கு வருவதற்கு ஒரு விசேஷித்த கடிதத்தை எழுதியுள்ளது.

ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், பல்வேறு இடங்களிலும்!

32 ஹவாய் தீவுகள் அன்றொரு நாள் அங்கு வந்தன. அவர்கள் ஒரு எழுப்புதலுக்காக அழைத்திருப்பது இது பத்தாவது முறையாகும்.

கிறிஸ்தவ வர்த்தக புருஷர்கள் அங்கே சென்று, அதன் மேல் பறந்து செல்ல விரும்புகிறார்கள், ஒரு ஒழுங்கை உண்டாக்கி, ஒரு அதிகாரத்தை ஸ்தாபித்து, அன்று காலை அவர்களுக்காகப் பேச, அதன்பின்னர் ஹவாயில் ஒரு எழுப்புதல் கூட்டத்தைத் துவங்க வேண்டும்.

33 எனவே முழு உலகமும் நம்முடைய சபையாகிவிட்டது, பாருங்கள், முழு உலகமும். நாம் அவருடைய ஊழியக்காரர்களாயிருக்கிறோம்.

34 எனவே நண்பர்களே, நாம் சற்று நினைவில் கொள்வோமாக, அதாவது இது கடைசி இரவாக இருக்கலாம், இது கடைசி வருடமாக இருக்கலாம், அல்லது ஒருக்கால் கடைசி தலைமுறையாக இருக்கலாம். புரிகிறதா? நமக்குத் தெரியாது. ஆனால், எப்படியாயினும், ஜீவனுள்ளவர்கள் தாங்கள் மரிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள் என்ற ஒரு உண்மையை நாம் அறிவோம். “அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே.” இன்றிரவு இங்குள்ள எவரேனும் அதைச் சந்திக்க ஆயத்தமாயில்லையென்றால், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையைப் பெற்றிருக்கவில்லையென்றால், இந்த இரவை நீங்கள் கர்த்தராகிய இயேசுவுக்கென்று, ஒரே முறை நித்தியமாகத் தீர்மானிப்பீர்களாக.

இப்பொழுது நாம் ஜெபம் செய்வோம்.

35 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இங்குக் காத்திருக்கிறோம் என்பதை அறிந்து, எங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து நாங்கள் உமக்கு நன்றி கூற விரும்புகிறோம், குழப்பமடையாமல்; அவர்கள் எத்தனை அணுகுண்டுகளை தயாரித்தாலும் அது ஒரு பொருட்டல்ல, விமானங்களைக் கவனிக்க எத்தனை அரசு ஊழியர்களை அவர்கள் அனுப்பியுள்ளனர், உலகமே பதட்டமும், நடுக்கமும் கொண்டிருக்கிறது. நாங்கள் நம்பியிருக்கிற இந்த ஆனந்த பாக்கியத்தின் பேரில் நாங்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவினூடாகக் கல்வாரியிலே தேவனுடைய முடிவுற்ற கிரியையில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறோம். இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்து போனாலும், நாம் ஏற்கனவே அக்கரையில் காத்துக்கொண்டிருக்கிற ஒன்றைப் பெற்றுள்ளோம் என்பதை அறிந்திருக்கிறோம்; அதிக மகிமையுள்ளதாயும், இன்னும் அதிகமாயும், அங்கு வலியோ, துன்பமோ சுகவீனமோ இல்லை. எந்த வயோதிபமும் ஒருபோதும் அதைத் தாக்காது, ஒருபோதும் நரைத்த தலைமுடியோ, ஒருபோதும் ஒரு சுருக்கமோ இருக்காது, ஆனால் எங்களுக்கு அங்கே என்றென்றும் வாலிபமாக இருப்போம்.

36 சத்தியத்தைத் தவிர வேறெதையும் கூற முடியாத இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வேதாகமம், எங்களுக்கு இந்த

ஆசீர்வதிக்கப்பட்ட உறுதியைத் அளித்துள்ளது. பரிசுத்த ஆவியானவரும் கூட ஒரு சாட்சியாயிருந்து, அதையே சாட்சி பகருகிறார். அதற்காக எங்களுடைய இருதயங்கள் ஏங்குகின்றன. வேதம் அவ்வண்ணமாய்க் கூறுகிறது என்பதை நாங்கள் அறிவோம், அது தேவனுடைய வார்த்தையாயுள்ளது, இந்த நம்பிக்கையில் நாங்கள் இளைப்பாறும்படியாக இந்த வளமான நிலத்தில் விதைக்கப்பட வேண்டும்.

37 தேவனே, கிறிஸ்துவுக்குப் புறம்பேயுள்ள ஒவ்வொரு நபரையும் இன்றிரவு நீர் தொட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இந்த நெருக்கமான, அற்புதமான நடைக்கு அவர்களைக் கொண்டு வாரும். கர்த்தாவே, இன்றிரவு இங்குச் சுகவீனமாயிருக்கிறவர்களை சுகப்படுத்தும். இந்த அநேக ஜனங்களுக்கு மத்தியில் சுகவீனம் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமேயில்லை. நீர் ஒவ்வொருவரையும் சுகப்படுத்த வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

38 பிதாவே, இப்பொழுது வார்த்தைக்கு வாரும். ஜீவ நாடியாகிய வார்த்தையை எடுத்துக்கொள்ளும். கர்த்தாவே, எல்லா நாகரீகத்தின் அடி வேர்கள். பரிசுத்த ஆவியானவர் தாமே ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்து, எங்கள் தேவைக்கேற்ப அதை இருதயத்தில் அருளும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் வார்த்தையைச் சுற்றி ஐக்கியங்கொள்வோமாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

39 இன்றிரவு வேத வாசிப்பதற்கு ஒரு—ஒரு சிறு பாடப் பொருளுக்காக, ஒரு சூழலைத் தேட முயற்சிக்கவே, நாம் இராப்போஜனத்தில் பங்கு கொள்ளும்படி துரிதமாக வார்த்தைக்குச் செல்ல வேண்டும். நாளைத் திங்கட்கிழமையாயிருப்பதால், வேலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற அந்தக் காரியங்களைக் குறித்து நாம் சிந்திக்க விரும்புகிறதில்லை என்பது எனக்குத் தெரியும், ஆனால் நாம் அதைச் சந்திக்க வேண்டும். அநேக சமயங்களில், உங்களுக்குத் தெரியும்…ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, இது வேலைகளைக் காட்டிலும் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் அவசியமானதாயுள்ளது. பார்த்தீர்களா? ஏனென்றால் என்றோ ஒரு நாள் உங்களுடைய வேலை முடிவிற்கு வரும், நீங்களும் அதனுடன் முடிந்து போவீர்கள். ஆனால் நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருந்தால், உங்களுக்கு ஒருபோதும் முடிவே இருக்காது. அது நித்தியமானது; அது நித்தியமாய் ஜீவிக்கிறது. அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். ஒரு நித்திய ஜீவனுக்கு முடிவே கிடையாது. நெடுங்காலங்கள் கடந்து போகும்போது, நீங்கள் இன்னமும் அங்கே இருப்பீர்கள். இலட்சக்கணக்கான ஆண்டுகள் கடந்தாலும், நாம் இன்னமும் அங்கிருப்போம். எனவே, இங்கே பூமியில் உள்ள ஒரு சில நாட்களுக்கு, வேலைகள் அவ்வளவு பெரியதாக இல்லை. நமக்கு உதவி செய்ய, நம்முடைய சிறு ஆகாரம்,

போன்றவற்றை வாங்கி புசிக்கிறோம், அதை நாம் கொண்டிருக்க வேண்டும்.

40 இப்பொழுது முதலாம் கொரிந்தியர் 10-ம் அதிகாரம், 12-ம் வசனத்திலிருந்து துவங்குகிறது.

> *ஆகையால், இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.*
>
> *மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்;* …யார்—யார் என்று நீங்கள் விரும்புகிறார்…*உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, ஒவ்வொரு சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.*

41 என்னே ஒரு அழகான வசனம்! கர்த்தர் தாமே தம்முடைய ஆசீர்வாதங்களை அதற்குக் கூட்டுவாராக. *ஒரு வழியை உண்டுபண்ணுதல்,* என்பதன் பேரில் இன்றிரவு நான் பேச விரும்புகிறேன். தெரியும்…நாம் இப்பொழுது வார்த்தைக்குச் செவிகொடுக்கும்போது, அவர் தம்முடைய வார்த்தையோடு தம்முடைய ஆசீர்வாதத்தைக் கூட்டுவாராக.

42 அது என்னுடைய அபிப்பிராயம், அதாவது வார்த்தை, அதாவது புல் வேர், அதுபற்றிக் கொள்கிறது…அநேக சமயங்களில் என்னுடைய சுகமளிக்கும் ஆராதனைகளில், நான்—நான் முயற்சிக்கிறேன், போதகர்கள் இதையெல்லாம் ஏற்கனவே கடந்துவிட்ட பிறகும் கூட, நான் திரும்பி வந்து வார்த்தையை எடுத்து ஒரு அஸ்திபாரத்தை போட முயற்சிக்கிறேன்.

43 ஒரு சில இரவுகளுக்கு முன்னர், எனக்கு ஒரு சிறு விமர்சனக் கடிதம் கிடைத்தது, அது பரவாயில்லை. ஒரு மனிதன் என்னிடத்தில், “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் இன்னமும் ஒரு பையனாயிருக்கிறீர்கள்” என்றார். மேலும், “நீர் பிறப்பதற்கு முன்பே நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்” என்றார். மேலும் அவர், “நான்…என்னுடைய நாற்பத்தாறு வயது முழுவதும், ஆனால் இன்னும்…” என்றார். அவர்—அவர் ஏதோ ஒரு வேதாகமப் பள்ளியின் ஆசிரியராய் இருந்தார். அவர், “ஆனால் ஜனங்களுக்குப் போதிக்கின்ற, உங்களுடைய விதமான ஒரு மனிதர், அன்றிரவு நீங்கள் கூறின ஒரு கருத்தை எப்படி கூற முடிந்தது” என்றார். மேலும் அவர், “அது முட்டாள்தனமானது என்று நான் நினைக்கிறேன்” என்றார். “பிசாசு சுகப்படுத்த எந்த வல்லமையையும் பெற்றிருக்கவில்லை என்று நீர் கூறினீர்” என்றார். அவர், “ஒருவேளை, சுகமாக்க பிசாசுக்கு வல்லமை உண்டு என்று

நான் உங்களிடம் கூறினால் என்னவாகும்" என்றார். அவர், "நீர் இப்பொழுது இங்கே நின்று கொண்டிருந்தால், நீங்கள் என்னைக் கேட்பீர்கள், ஏன் எனக்குத் தெரியும்" என்றார். தொடர்ந்து அவர், "நான் உங்களுக்குக் கூறுவேன்" என்றார். "எங்கள் ஊரில் ஒரு—ஒரு மோசமான ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கே வசிக்கிறாள். அவள்…ஜனங்கள் அவளிடம் சுகமளித்தலுக்கு வருகிறார்கள்" என்றார். "அவள் அவர்களுடைய தலைமுடியை பிடுங்கி, அவர்களுடைய நரம்புகளிலிருந்து இரத்தத்தை வார்த்து, அதை இந்த முடியில் சுற்றிவிடுவாள். ஆற்றண்டை நடந்து சென்று, இந்தக் காரியத்தை அவளுடைய தோளின் மேல் வீசிவிட்டு, திரும்பிப் பார்க்கமாட்டாள். அவள் திரும்பிப் பார்த்தால்," என்று கூறி, "அப்பொழுது அந்த வியாதி அந்த நபருடன் நிலைத்திருக்கும். ஆனால் அவள் அதை ஆற்றில் எறிந்துவிட்டு, அது மறதியைப் போன்றே நடந்து சென்றுவிட வேண்டும்" என்றார். மேலும், "அறுபது சதவிகிதம் ஜனங்கள், குணமடைந்து விட்டார்கள் என்று நாங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம்" என்றார். "இப்பொழுது பிசாசினால் சுகமளிக்க முடியவில்லையென்றால், அதைக் குறித்து என்ன?" என்று கேட்டார்.

44 எனவே, நான் அவருக்குப் பதிலுரைத்தேன். நான், "என்னுடைய அன்பார்ந்த சகோதரனே, உங்களுடைய வருடங்களுக்கான எல்லா மரியாதையோடும்," பாருங்கள், "உங்களுடைய போதனை வருடங்களுக்குரிய முழு மரியாதையை செலுத்துகிறேன், ஆனால் பிசாசு சுகப்படுத்த வல்லமையேக் கிடையாது என்று இயேசு கிறிஸ்து கூறினார் என்பதை இப்பொழுது நான் உங்களுக்குக் கூறவுள்ளேன். இயேசு அதைக் கூறினார் என்றால், அது எனக்குத் தீர்வாகிறது. அவர், 'சாத்தான் சாத்தானை துரத்தினால், அப்பொழுது அவனுடைய இராஜ்ஜியம் பிளவுண்டு, அதற்கு முடிவு உண்டு. அவனால் சாத்தானைத் துரத்த முடியாது.' என்றார். அப்படியானால் நீங்கள் என்னிடத்தில், 'இந்த ஜனங்கள் ஏன் சுகமடைந்தனர்?' என்று கேட்பீர்கள். ஏன், அது அந்த நபர் அல்ல. அந்தச் சூனியக்காரிக்கு அதனோடு எந்தச் சம்மந்தமும் கிடையாது, எனக்கோ அல்லது வேறு எந்த மனிதனுக்கோ எந்தச் சம்பந்தமும் இல்லாதது போலவே. தேவனால் அருளப்பட்ட தங்களுடைய சுகமளிக்கும் வழிக்காகத் தாங்கள் வந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிற ஜனங்களாய் இது உள்ளது. அது தேவனில் உள்ள அவர்களுடைய தனிப்பட்ட விசுவாசமாயுள்ளது, அதுவே சுகமளித்தலை செய்கிறது. பார்த்தீர்களா? அவர்கள் நினைக்கின்ற அந்த அணுகுமுறை தான் செய்கின்றது. அது சூனியக்காரியல்ல, ஏனென்றால் அது அந்த மனிதனைக் காட்டிலும் மேலானதல்ல" என்று கூறினேன். ஆம்.

45 ஆகையால் சுவிசேஷமானது செயல்பட அல்லது தேவனுடைய வார்த்தை போதிக்கப்பட்டிருக்கிறபடி மாத்திரமே அது சென்றடைய முடியும். மனிதர் தேவனுடைய நித்திய வார்த்தையின் பேரில்

தங்களுடைய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். "விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி வசனத்தினாலே வரும்."

46 டாக்டர் அடேயர், இங்கே நகரத்தில் உள்ள, என்னுடைய அருமை நண்பர், ஒரு நாள் என்னிடத்தில் கூறினார், அவர், "பில்லி, ஜனங்கள் அங்கே மரத்தைத் தொடும்படியான விசுவாசத்தை உடையவர்களாயிருந்தால், அவர்கள் அதே பலன்களையே பெற்றுக்கொள்வார்கள் என்று நீர் நினைக்கவில்லையா?" என்று கேட்டார்.

47 நான், "உங்களுக்கு அதில் எப்படி விசுவாசம் இருக்க முடியும்? நீங்கள் சம அளவு விசுவாசத்தை உடையவர்களாயிருக்கக் கூடுமானால், விசுவாசியுங்கள்...அது தேவனால் அருளப்பட்ட வழி என்று விசுவாசித்து, நீங்கள் மரத்தைத் தொட்டால், அது அதைச் செய்யும், அப்பொழுது அவர்களால் அதைச் செய்ய முடியும். ஆனால் மரத்தின் மேல் விசுவாசமுள்ளவன் யார்?" என்று கேட்டேன்.

48 தேவன் என்ன கூறினார் என்பதில் எனக்கு விசுவாசம் உண்டு, நான் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். எனவே விசுவாசமானது உணர்ச்சிவசப்படுகிற கருத்துகளின் நிலையற்ற மணல் மீது கட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் விசுவாசமோ தேவனுடைய நித்திய வார்த்தையாகிய காலங்களின் கன்மலையின் நியமத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது. அங்கேதான் விசுவாசமானது அதனுடைய பயபக்தியான இளைப்பாறும் ஸ்தலத்தை எடுத்துக்கொள்கிறது, அது அங்கே சரியாகக் கட்டப்படும்போது, அது ஒருபோதும் அசையாது.

49 இப்பொழுது, ஒரு வழியை உண்டாக்குதல். தேவன் தம்முடைய உத்தியோகத்தை ஒரு தற்செயலான வழியில் நடத்துகிறார் என்று நான் நம்புகிறதில்லை. நான்—நான் என்னுடையதை இயக்கமாட்டேன், நீங்கள் உங்களுடையதை இயக்கமாட்டீர்கள். இயேசு கல்வாரியில், "சரி, இப்பொழுது ஜனங்கள் எனக்காகப் பரிதாபப்படலாம், நான் பூமிக்கு வந்து, மாம்ச ரூபத்தைத் தரிக்கிறேன். நான் எவ்வளவு பரிதாபமாகச் மரிக்கிறேன் என்பதை அவர்கள் கண்டால், ஒருவேளை அவர்கள் உண்மையாகவே இரட்சிக்கப்படுவார்கள்" என்று கூறுவதற்காக மரிக்கவில்லை. தேவன் அதைச் செய்யவில்லை. தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களை இரட்சிக்கவே இயேசு ஒரு நோக்கத்திற்காகவே மரித்தார். அது உண்மை. யாரோ ஒருவர் இரட்சிக்கப்படப் போகிறார் என்பதை தேவன் அறிந்திருந்தார், மேலும் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஒரு ஆயத்தம் அல்லது ஒரு வழி செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இல்லையென்றால், இரட்சிப்பு என்பது சாத்தியமில்லை.

50 ஆகையால் தேவன், ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை முன்னறிந்து, அவர்கள் யாராயிருக்கிறார்கள்

என்பதை அறிந்திருந்தபடியால், அவர் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டியதாயிருந்தது. இப்பொழுது நீங்கள் என்னிடத்தில், “சகோதரன் பிரான்ஹாம், அப்படியானால் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை தேவன் சரியாக அறிவாரா?” என்று கேட்கலாம். சரியாக. “சரி, ஏன், ‘ஒருவரும் கெட்டுப்போக வேண்டும் என்று அவர் விரும்பவில்லை என்று வேதம் கூறுகிறது’?” அவர் விரும்பவில்லை. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.

51 ஆனால் தேவனாக இருக்க வேண்டுமென்றால், யார் அதைச் செய்வார் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும், இல்லையென்றால் அவர் தேவனல்ல. காரணம், அவர்— அவர் சர்வ வல்லமையுள்ளவராயிருக்கிறார். அவர் எங்கும் நிறைந்தவராயிருக்கிறார். அவர் சர்வ ஞானமுள்ளவராயிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் ஒவ்வொரு இடத்திலும், சர்வ வல்லமையுள்ளவராயிருக்கிறார். எனவே, முன்னறிவு திரும்பிப் பார்த்து, அவர் இதை முன்னரேக் கண்டு, அறிந்திருக்கிறார் என்று கூறுகிறது, அந்தக் காரணத்தினால்தான் முடிவு என்னவாயிருந்தது என்பதை துவக்கத்திலிருந்தே அவரால் கூற முடிந்தது.

52 ஆகையால், நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த அற்புதமான நாட்களில் நாம் இப்பொழுது காண்கிற காரியங்களைக் காணவும், நின்று சாட்சி கொடுக்கவும், தேவன் அதற்காக ஒரு ஆயத்தத்தை செய்ய வேண்டியதாயிருந்தது.

53 அன்றொரு இரவு, மிகவும் ஆச்சரியப்பட்டேன். ஒரு சிறு பெண் மேடைக்கு வந்தாள். அங்கே மூன்று லட்சம் டாலர்கள் மதிப்புள்ள அந்தப் பெரிய இடத்தில், அவள் முகத்தில் ஒரு சிறிய ஒப்பனைப் பொருட்களைப் பூசியிருந்தாள். அவள் அங்கேயே நின்று நடுங்கத் துவங்கினாள். நான் பரிசுத்த ஆவியினால், “நீ ஒரு லூத்தரன்” என்றேன்.

அவள், “ஆம், ஐயா” என்றாள்.

54 மேலும் நான், “ஜெபிக்கப்படுவதற்காக நீர் இங்கே இருக்கிறீர். நீர் இந்தவிதமாக நடந்து கொண்டிருப்பதன் காரணம் என்னவெனில், இரண்டு முழங்கால்களும் உடைக்கப்பட்டிருந்தன” என்றேன். நான், “அது ஒரு கார் விபத்தினால் உண்டானது, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நீர் ஓட்டிச் சென்ற ஒரு கார்,” என்றேன்.

அவள், “அது உண்மைதான்” என்றாள்.

55 நான், “உம்முடைய மருத்துவர் ஒரு சிறிய உருவங்கொண்ட, வழுக்கைத் தலையுடன், மூக்கு கண்ணாடி அணிந்திருக்கிறார்” என்றேன்.

அதற்கு அவர், “அது உண்மை” என்றாள்.

56 மேலும் நான், “அவர் முழங்காலில் உள்ள எலும்பு காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், சிகிச்சை அளித்து வருகிறார், மாம்சமும் கூட எலும்பைச் சுற்றி அழுகிக் கொண்டிருக்கிறது” என்று கூறினேன்.

அவள், “அது சரிதான்” என்றாள்.

அவள், “எனக்கென்று ஒரு நம்பிக்கை உண்டா?” என்று கேட்கிறாள்.

57 நான், “அது கர்த்தராகிய இயேசுவை நீர் அணுகுவதைப் பொறுத்தது” என்றேன். நான் கூறினேன்...

அவள், “உங்களால் எனக்கு உதவி செய்ய முடியுமா?” என்று கேட்டாள்.

58 நான், “இல்லை அம்மா. இப்பொழுது யாருமே உனக்கு உதவி செய்ய முடியாது. ஆனால் தேவன் உனக்காக அளிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களுக்கு நீயே உதவி செய்ய வேண்டும்” என்று கூறினேன்.

அவள், “நான் இப்பொழுது என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன்” என்றாள்.

59 நான், “சகோதரியே, கர்த்தர் உன்னைச் சுகப்படுத்தினார். அது **கர்த்தர் உரைக்கிறதாவது என்பதாகும்**. நீ சுகமடைந்துவிட்டாய்” என்றேன்.

60 அவள், “திரு. பிரான்ஹாம், என்னால் முழங்காற்படியிட முடியவில்லை” என்றாள். மேலும் அவள், “நான்கு ஆண்டுகளாக” என்றாள். அவள் அங்கே நின்றுகொண்டு அழுது கொண்டிருக்கையில், அவளுடைய கரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். திரளான ஜனக்கூட்டம் அவளைப் பார்த்து அழுது கொண்டிருந்தது; லூத்தரன்கள், பிரஸ்பிடேரியன்கள். மேலும் நான், “நீர் ஏன் பீடத்தண்டைக்கு சென்று முழங்காற்படியிடக் கூடாது?” என்று கேட்டேன்.

61 அவள், “நான் சுகமடைந்த இடத்தில், நான் இங்கே முழங்காற்படியிடட்டும்” என்றாள். அவள் ஒருபோதும் அவளுடைய படிகளிலிருந்து நகர்ந்து செல்லவில்லை, ஆனால் அவள் சுகமடைந்தாள் என்பதை அறிந்திருந்தாள். ஏதோ ஒன்று சம்பவித்தது. பார்த்தீர்களா? அவள் அதை அறிந்திருந்தாள். அதைக் குறித்து எந்த யூகித்தலும் இல்லை.

நான், “முழங்கால் படியிடு” என்றேன்.

62 இரண்டு முழங்கால்களும் நொறுங்கி, கடினப்பட்ட நிலையில், எலும்புகள் ஒன்று சேர்ந்த நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்; அந்த ஸ்திரீ, ஒரு வாலிப ஸ்திரீயைப் போல, அவளுடைய கன்னங்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட முழங்காற்படியிட்டு, அவளுடைய கரங்களைத் தேவனிடத்தில் உயர்த்தினாள். பாருங்கள், அங்கிருந்து மிக எளிதாக எழும்பி, ஒரு

சிறு பெண்ணைப் போல, மேடையிலிருந்து கீழே குதித்தாள். அது என்னவாயிருந்தது? தேவன் அதற்கான ஒரு வழியை உண்டுபண்ண வேண்டியதாயிருந்தது.

63 இப்பொழுது, அவர் மருத்துவர்களை அனுப்பினார், அது உண்மை. மருத்துவர்கள் அருமையாயிருக்கிறார்கள், அவர்களால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் அவர்கள் செய்திருந்தனர். ஆனால் தேவன் ஒரு வழியை உண்டுபண்ணியிருந்தார். அதுதான். பார்த்தீர்களா? மருத்துவர் தன்னுடைய வழியில் தவறிய பிறகு, தேவனுடைய வழி நம்முடைய வழியைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததாயுள்ளது. என்ன ஒரு அற்புதமான காரியம்!

64 இப்பொழுது, இன்றிரவு சிந்தித்துப் பார்க்கையில், நீங்களும் நானும்...இதைச் சிந்திக்க விரும்பமாட்டார்கள், ஆனால் நாம் உண்மையாகவே உலகத்தின் சுபாவமுள்ளவர்களாய், அதாவது, பன்றிகளைப் போல இருக்கிறோம். இன்றிரவில், நாம் பரிசுத்தவானாகி விட்டோம். ஏதோ ஒன்று செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இப்பொழுது, நாம் பன்றிகளைப் போல் பரலோகத்திற்குள் போக முடியாது. நாம் பரிசுத்தவான்களாகப் பரலோகத்திற்கு செல்ல வேண்டும், எனவே இதற்காக ஒரு ஆயத்தம் செய்யப்பட வேண்டியதாயிருந்தது.

65 தேவன் அதைப் பழைய ஏற்பாட்டில் மிக அழகாக வெளிப்படுத்தினார். முன்பு எண்ணாகமம் 20-ம் அதிகாரத்திலும், யாத்திராகமம் 36, 32லும், பாவநிவிர்த்தியின் நாளில் வந்தது என்று நாம் கண்டறிகிறோம்...தேவன் அந்த மாதிரிகளில், அவர் வரும்போது, அந்த முன்மாதிரியில், அவர் என்ன செய்வார் என்பதை முன்னறிவித்தார், அது கிறிஸ்துவாயிருந்தது.

66 பிரதான ஆசாரியன் இரண்டு வெள்ளாடுகளை, சிறிய வெள்ளாடுகளை, அவைகளை பாவநிவிர்த்திக்காகவும், ஒரு பலியாகவும், தன்னுடைய சொந்த குடும்பத்திற்காக ஒரு காளையை எடுத்துக்கொள்வான். இங்கே வாசிக்கிறவர்களும், வேதாகமத்தை படித்தவர்களுமான அநேகர், பாவநிவிர்த்தி எப்படி இருந்தது என்பதை அறிவீர்கள். ஆனால் அதன்பின்னர், ஒரு வெள்ளாடு... ஒரு சீட்டு போட வேண்டியிருந்தது. ஒரு வெள்ளாட்டின் மேல் சீட்டு விழுந்து, அது மரித்தது, அதன் பின்னர் இந்த வெள்ளாட்டின் இரத்தம் மற்றொரு வெள்ளாட்டின் மீது பூசப்பட்டது, பிரதான ஆசாரியனுடைய கரங்களினால் உயிருள்ள வெள்ளாட்டுக்கடாவின் மேல் ஜனங்களின் பாவங்களை அறிக்கை செய்தான். அதற்குத் தகுதியான ஒரு மனிதன், உயிருள்ள வெள்ளாட்டை தன் கரத்தின் கீழ் கொண்டு வந்து, வெள்ளாடு அழிந்துபோக வேண்டியிருந்த வனாந்திரத்திற்குள்ளாகச் சென்று, தனிமைப்படுத்தப்பட்ட, வழியில்லாத ஒரு இடத்திற்குச் சென்றது. இனி ஒருபோதும், அந்த நிலையில், மீண்டும் தன்னுடைய சொந்த குடும்பத்திற்குத்

திரும்ப வரவே கூடாது, ஆனால் ஜனங்களின் பாவங்களைச் சுமந்து, என்றென்றைக்குமாய் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

67 இப்பொழுது இங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அநேக வேத பண்டிதர்களை நான் அறிவேன். விசேஷமாக ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர், அவர்கள்—அவர்கள், "ஒரு வெள்ளாடு கிறிஸ்துவாயிருந்தது, மற்றொன்று பிசாசு" என்று கூறுகிறார்கள். இப்பொழுது, சகோதரரே, நான் இதைக் குறித்து சற்று வித்தியாசப்பட வேண்டும். நாம் பிசாசிற்கு பலி செலுத்த முடியாது. இரண்டு வெள்ளாடுகளும் கிறிஸ்துவுக்கு எடுத்துக்காட்டாய் உள்ளன. அவைகள் இரண்டுமே கிறிஸ்துவாயிருந்தன. கிறிஸ்து நம்முடைய… அவர் நம்முடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தினார், அவர் தாமே அவைகளை சுமந்து சென்றார். பிசாசினால் என்னுடைய பாவங்களைச் சுமக்க முடியாது. கிறிஸ்து நம்முடைய பாவத்தைச் சுமப்பவராயிருக்கிறார். அதைச் சரிப்படுத்திக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுடைய விசுவாசம் அசையாது. கிறிஸ்து உலகத்தின் பாவங்களையும், நம்முடைய பாவங்களையும் சுமப்பவராக இருக்கிறார்.

68 கிறிஸ்து சிலுவையில் மரித்துக்கொண்டிருக்கிற மிருகமாயிருந்தார், கவனியுங்கள், "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்." முன்னடையாளங்கள் என்றோ ஒரு நாள் வரும் என்று நாம் அறிந்திருந்தும், நாம் பங்காதாயத்தைப் பெற்றுக் கொண்டிருந்தோம்.

69 அவர் ஏன் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்டார்? ஏனென்றால் அந்தக் காரியங்கள் எப்படியிருக்கும் என்றும், சபை என்னவாயிருக்கும் என்றும், ஒவ்வொரு காரியமும் என்னவாயிருக்கும் என்றும் தேவன் தம்முடைய சிந்தையில் அறிந்திருந்தார், அவர் வார்த்தையை உரைத்தார். தேவன் வார்த்தையை உரைக்கும்போது, அது அப்பொழுது செய்தது போலவே முடிவாகிவிடுகிறது, எனவே அவர் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்டார். நீங்கள் அதைக் காண்கிறீர்களா?

70 நீங்கள் இப்பொழுது அதற்கு வரும்போது, உங்களுடைய விசுவாசம் பயபக்தியோடு இளைப்பாறட்டும்; மனிதனின் பேரில் அல்ல, மனிதனின் வேத சாஸ்திரங்களின் பேரில் அல்ல, சபை ஸ்தாபனங்களின் பேரில் அல்ல, அவைகள் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், மனிதன் எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் அது பொருட்டல்ல. உங்களுடைய விசுவாசம் கல்வாரியில் பாவத்திற்காகவும், இரட்சிப்பிற்காகவும் கிறிஸ்துவினுடைய முடிவுற்ற கிரியைகளில் மாத்திரமே தங்கியிருப்பதாக. நீங்கள் அதைக் காண்கிறீர்களா?

71 கவனியுங்கள், கிறிஸ்து வந்தார், அவர் மரித்துக் கொண்டிருக்கும் மிருகமாயிருந்தார், ஏனென்றால் அவர் உலகத் தோற்றத்திற்கு

முன்னரே (முன் உருவத்தில்) அடிக்கப்பட்டார். நீங்கள் அதைக் காண்கிறீர்களா? தேவன் அதை உரைத்தார், அது அவ்வண்ணமாக இருக்கும் என்று கூறினார். எனவே, தேவன் பேசும்போது, அது என்றென்றைக்குமாய் பரலோகத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது. வார்த்தை…

72 அங்குதான் நீங்கள் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும். இது தேவனுடைய நித்தியமான, மாறமுடியாத வார்த்தை என்று நீங்கள் விசுவாசித்தால், அப்பொழுது தேவனுடைய வார்த்தையில் உரைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு கட்டளையும் ஒரு வித்தாகும். தேவன் வார்த்தையில் உரைத்துள்ள ஒவ்வொரு காரியமும் ஏற்கனவே மகிமையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் செயல்படும்படிக்கு அது உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் தேவனுடைய நித்தியமான, ஆசீர்வதிக்கப்பட்ட வார்த்தையின் எந்தக் கட்டத்தையும் எடுத்து, அதை உங்களுடைய இருதயத்தில் நங்கூரமிட பயப்படாதீர்கள். இப்பொழுது, அது மண்ணில் இருக்க வேண்டும்.

73 இப்பொழுது, உதாரணமாக, நான் ஒரு தானிய விதையை எடுத்துக் கொண்டு, அதை நீலக்கல்லில் போட்டிருக்கிறேன் அல்லது அதைப் போன்ற ஏதோ ஒன்று, அது ஒரு வேளை வளராது, ஏனென்றால் அது தவறான வகை மண். ஆனால் அது நல்ல, வளமான கருமையான நிலத்திற்குச் சென்றால், அது அங்கே வைக்கப்பட்டவுடன் நிச்சயமாய் வளரும். மேலும் வார்த்தை…

74 இப்பொழுது இதோ அது உள்ளது! தேவனுடைய வார்த்தையானது விசுவாசத்தினால் நிறைந்த ஒரு இருதயத்திற்குள் விழும்போது, அது வளர வேண்டும். அதுபற்றிக் கொள்ள வேண்டும். அந்த ஸ்திரீ அங்கே நின்றுகொண்டிருந்த காரணம் என்னவெனில், இரு முழங்கால்களிலும் இந்தவிதமாகச் சுண்ணாம்புச் சத்து சேர்ந்திருந்தது, மற்றும் முழங்காலில் எலும்புகள் நொறுங்கி, அங்கு இரண்டும் நசுக்கப்பட்டிருந்தன, காசநோயினால் எலும்புகள் அழுகிப் போய், மாம்சமும் கூட, அவள் முழங்காற்படியிட பயப்படவில்லை. எதற்காக? வார்த்தை விசுவாசத்தில் விழுந்தது. மேலே எழும்புகிறது! இது உங்களுக்குப் புரிகிறதா?

75 தேவன், உலகத் தோற்றத்திற்கு முன்னரே, கிறிஸ்து இங்கே இருப்பார் என்று கூறினார். அவர் குற்றமற்றவர், குற்றவாளிகளுக்காகக் அடிக்கப்பட்டு, மரிப்பார். தேவன் அதை உரைத்தபோது, அது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது தேவன் அதை உரைத்தபோது.

76 இப்பொழுது, அது ஒரு வார்த்தையாக இருப்பதற்கு முன்பு, அது ஒரு சிந்தனையாக இருக்க வேண்டும், ஏனென்றால் ஒரு வார்த்தை வெளிப்படுத்தப்பட்ட ஒரு சிந்தனையாகும். அதன்பின்னர்…தேவன்,

தம்முடைய சிந்தையில், இந்தக் காரியங்களை அறிந்திருந்தால், அப்பொழுது அவைகள் அவருடைய சிந்தையில் இருந்தன. அதன்பின்னர், அவர் அவைகளை பேசினார், தேவன் பேசும்போது அவை முடிந்துவிட்டதாகவே கருதப்படும், ஏனென்றால் அவர் பிழையற்றவராயிருக்கிறார், வேறொன்றையும் செய்ய முடியாது.

77 அப்படியானால் தேவனுடைய மனப்பான்மை. தேவன் அங்கிருந்த பாவிகளை இரட்சித்திருந்தால், சர்வாங்க தகனபலியை ஏற்றுக்கொள்வதன் அடிப்படையில், அருளப்பட்ட பலி, அவர் இன்றைக்கும் அதேக் காரியத்தைச் செய்ய வேண்டியவராயிருக்கிறார், இல்லையென்றால் அவர் அதன் மூலம் முதல் மனிதனை அவ்வாறு ஏற்றுக்கொண்டபோது அவர் தவறு செய்தார். தேவன் அங்கிருந்த வியாதியஸ்தரை ஒரு மிருகத்தின் சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையில், பாவநிவிர்த்தியின் அடிப்படையில் சுகப்படுத்தியிருப்பாரானால், இன்றைக்கும் அவர் அதையே செய்ய வேண்டியவராயிருக்கிறார், இல்லையென்றால் அவர் முதல் நபரைச் சுகப்படுத்தியபோது அவர் தவறாக இருந்தார். பார்த்தீர்களா? அவர் மாற முடியாது.

78 நாம் வளருகிறோம். நாம் முதிர்ச்சியடைகிறோம். நாம் மேலான காரியங்களைக் கண்டறிகிறோம். நாம் மேலான காரியங்களைக் குறித்துப் பேசுகிறோம். நாம் சிறந்த ஆடைகளை அணிந்து, ஒரு சிறந்த மோட்டார் வாகனத்தை ஓட்டுகிறோம். நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

79 ஆனால் தேவனால் அந்தவிதமாக முன்னேற முடியாது, ஏனென்றால் அவர் துவக்கத்திலேயே பரிபூரணமாக இருந்தார். பரிபூரணமானது இனிமேல் முன்னேற முடியாது; அது ஏற்கனவே பூரணமாகிவிட்டது. ஆமென். எனவே அவர், “பாருங்கள், இது ஒரு வித்தியாசமான காலம், நாம் இப்பொழுது ஒரு மேலான சிந்தனையைப் பெற்றுள்ளோம்” என்று கூற வேண்டியதில்லை. அப்படியானால், அவர் தேவனாக இருக்க முடியாது. எனவே, அவர் தேவனாயிருப்பாரானால், அவர் அங்கே முன்பு பேசினதோ, அவர் அதனோடு தரித்திருக்க வேண்டும், ஏனென்றால் அவர் அங்கே பரிபூரணராயிருந்தார், இப்பொழுதும் பரிபூரணமாயிருக்கிறார். பார்த்தீர்களா? நீங்கள் அதைக் காண்கிறீர்களா? அப்பொழுது அவரால் முன்னேற முடியாது. அவரால் முடியாது...பாருங்கள், நான் பொருட்படுத்திக் கூறுவது, அவரால் காரியங்களை மேம்படுத்த முடியாது. இதைச் சற்று...“இது இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும்” என்று கூறுங்கள்.

நீங்களோ, “பழைய ஆட்டுக்குட்டியையும், இந்த ஆட்டுக்குட்டியையும் குறித்து என்ன?” என்று கேட்கலாம்.

80 அது ஒரு முன்னடையாளமாயிருந்தது, அதற்காகக் காத்திருந்தது, அவர் அதைக் கூறினார். ஆதியிலே உலகத்தோற்ற முதல்

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைக் குறித்து அவர் பேசினார். “அவளுடைய வித்துக்கும் சர்ப்பத்தின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்.” அதன்பின்னர் அந்த முழு நேரத்திற்காகக் காத்திருக்க, தேவன் ஒரு பாவநிவிர்த்தியை அளித்தார், ஆட்டுக்குட்டியின் சிந்தப்பட்ட இரத்தத்தினூடாகச் சுட்டிக் காட்டுகின்றது.

81 பகல் நேரத்தில் சூரியனாக இருந்ததைக் குறித்து, அவர் இரவில் சந்திரன் மூலமாக அதேக் காரியத்தை அளித்தார். சந்திரன் சூரியனின் நிழலாய் இருந்தபடியால், அல்லது சூரியன் சந்திரனில் பிரகாசித்துக் கொண்டு, ஒரு நிழலை உருவாக்குகிறது. சந்திரனும் சூரியனும் கணவன் மனைவி. சூரியன் மறைந்துவிட்டாலும், அது சூரியன் வரும் வரையில் நமக்கு ஒரு சிறிய வெளிச்சத்தைக் கொடுக்கும்படியாகத் தன்னுடைய ஒளியை சந்திரனின் மீது வீசுகிறது. சூரியன் தோன்றும்போது, சந்திரனும் மறைந்துவிடுகிறது.

82 கிறிஸ்து மகிமைக்கு சென்றுள்ள சூரியனாய் இருக்கிறார், அவர் இங்கிருந்தபோது, அவர் பிரகாசித்த அதே ஒளியோடு, சபையின் மேல் பிரகாசித்தார். இயேசு வரும் வரைக்கும் சபையானது உலகின் வெளிச்சமாய் உள்ளது, அவை யாவும் ஒன்றாகச் சேர்ந்து உருகும். நிலவொளியும் சூரிய ஒளியும் ஒன்றாகச் சேரும்போது, அது ஒரு ஒளியாக மாறுகிறது. கிறிஸ்துவும் அவருடைய சபையும் மகத்தான ஆயிர வருட அரசாட்சியில் ஒன்று சேரும்போது, அவர்கள் ஒன்றாக வெளிப்படுகின்றனர்.

83 இன்றைக்கு, “நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்.” அவருடைய பிரசன்னத்தில்…சரியாகக் கூறினால், அவர் இல்லாத வேளையில், அவர் இங்கிருக்கையில், நீங்கள் பிரகாசிக்கும்படி அவர் ஒளியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பண்டைய காரியங்கள் யாவும், பூமியின் காரியங்கள் யாவும் பரலோகத்திற்கு ஒரு மாதிரியாயிருக்கின்றன.

84 சிலந்திகள், பல்லிகள், பாம்புகள் போன்றவையும் கூடப் பொல்லாத ஆவிகளுக்கு முன்னடையாளமாகப் பிரதிபலிக்கின்றன. புற்று நோய் ஏன் புற்றுநோய் என்று அழைக்கப்பட்டது? ஏனென்றால் அது ஒரு நண்டின் உருவத்தை உடையதாயிருக்கிறது. *புற்றுநோய்* என்ற சொல்லுக்கு “நண்டு” என்று பொருள்.

85 இப்பொழுது, நீங்கள் பாருங்கள், அந்த எல்லா காரியங்களும் முன்னடையாளங்களாகவும், நிழல்களாகவும் உள்ளன…எனவே, போக்காடு வனாந்திரத்தில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் அனுப்பப்பட்டு, தன்னுடைய சக குடிமக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஜனங்களின் பாவங்களைத் தன்னுடைய தலையின் மேல் சுமந்து, கிறிஸ்து தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவருடைய பிரசன்னத்தை விட்டுப் பிரிந்து, நம்முடைய பாவங்களை நரகத்திற்குள் சுமந்ததற்கு ஒரு மாதிரியாய் இருந்தது. அங்கே

தேவன் அவருக்கு இடங்கொடமாட்டார்…தாவீது, "உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்" என்றான். மூன்றாம் நாளிலே நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக உயிர்த்தெழுந்தோம். ஆனால் அவர் ஆட்டையும், போக்காட்டையும், பாவநிவாரண பலிக்கான வெள்ளாட்டுக்கடாவையும் மாதிரியாக்கினார். தேவன் ஆயத்தம் செய்து, ஒரு அருளப்பட்ட வழியை உண்டுபண்ணுகிறாரே!

86 தேவன் தப்பித்துக் கொள்ள ஒவ்வொரு முறையும் ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். சுகவீனம் உங்களை மூலையில் அடைத்து வைக்கிறது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக ஆன பிறகு, சாத்தான் உங்களை ஒரு இடத்தில் முடக்கிவிடுகிறான்.

87 நீங்கள் ஒரு சூதாட்டக்காரராக இருந்திருக்கலாம். நீங்கள் அதைக் காண்கிறீர்களா? அட்டைகள் மேசையின் மேல் உள்ளன. "வா, ஜான், அது உனக்குள் இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம்." உங்களைச் சோதிக்க சாத்தான் இருக்கிறான். ஆனால் தேவன், ஒவ்வொரு—ஒவ்வொரு நேரத்திலும், நீங்கள் அதை ஏற்றுக்கொண்டால், தப்பித்துக் கொள்ள ஒரு வழியை ஏற்படுத்துவார்.

88 ஒருக்கால் நீங்கள் ஒரு—ஒரு குடிகாரனாய் இருக்கலாம், உங்களுடைய மூக்கின் கீழ் கண்ணாடி உள்ளது. "இப்பொழுது, ஜான் வா" என்கின்றனர். இப்பொழுது, நீங்கள் அந்தச் சத்தத்திற்கு செவிகொடுக்க விரும்பினால், நீங்கள் நேராக உங்களுடைய சேற்றிற்கு சென்றுவிடுவீர்கள்.

89 ஆனால் தேவன் எப்பொழுதும் அங்கே இருக்கிறார். உங்களுடைய சிந்தை பரலோகத்தை நோக்கித் திருப்பி, கல்வாரியை நோக்கிப் பார்த்து, "ஸ்தோத்தரிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரே என்னிடத்தில் வாரும். நான் தேவையுள்ளவனாயிருக்கிறேன்" என்று கூறுங்கள். என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள். தேவன் ஒவ்வொரு முறையும் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உண்டாக்குவார், ஏனென்றால் அவர் அதைச் செய்வார். தேவன் எப்பொழுதுமே அதைச் செய்திருக்கிறார்.

90 இப்பொழுது கவனியுங்கள். உலகத்தின் அழிவிற்கு முன்னர், உலகத்தில் மனிதர்கள் பாவமுள்ளவர்களாயும், ஜனங்கள் பாவமுள்ளவர்களாயும் இருந்தபோது, அதன் மூலம் தப்பித்துக் கொள்ள வாஞ்சிக்கிறவர்களுக்காகத் தேவன் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உண்டுபண்ணினார். தேவன் ஒரு பேழையைக் கட்டி ஆயத்தப்படுத்தியிருந்தார். நோவா பேழையை கட்டி வந்தான்…ஒரு வழியை ஆயத்தம் செய்வதற்காக இந்தப் பேழையை ஆயத்தப்படுத்தினான். கவனியுங்கள். ஒரு…ஒரு தப்பிப்பதற்கான வழியாக…தேவனுடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் வானத்தில் குவிந்து கொண்டிருந்தது, பாவமுள்ள தேசத்தின் மேல்

ஊற்றப்படவும், பாவமுள்ள ஜனங்களின் மேல் ஊற்றப்படவும், அதைப் புறக்கணித்து, வணங்காக் கழுத்துள்ளவர்கள், தேவனுடைய கற்பனைகளுக்கு எதிராக நடந்தனர். இந்தக் கோபாக்கினை நியாயத்தீர்ப்பில் ஜனங்கள் மேல் ஊற்றப்படும்படியாக வானங்களில் குவிந்து கொண்டிருந்தது. அதில் நடக்க வாஞ்சிக்கிறவர்களுக்காக இரக்கமுள்ள தேவன் தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணினார். தப்பித்துக் கொள்வதற்கான வழி!

91 இப்பொழுது நியாயத்தீர்ப்புகள் குவிந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நாம் மீண்டும் வந்துள்ளோம். அந்த நாளிலே, ஜலப்பிரளய காலத்திலேயே அப்படியிருந்ததானால், இன்றைக்கு எவ்வளவு அதிகமாக இருக்கும், காலத்தின் சரித்திரம் முடிவடையும்போது, தேசங்களின் சரித்திரத்தின் முடிவு, ஒரு உச்சக்கட்டத்திற்கு வந்து கொண்டிருந்தபோது! இன்னும் கோடிக்கணக்கான மக்கள்மீது தேவனுடைய கோபம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது, பாவம் உலகில் ஊறிப் போகும் வரை, ஒன்றாகக் குவிந்து, அவள் நான்கு மணிக்குக் குடித்துவிட்டுத் தள்ளாடி வீட்டிற்குத் திரும்பும் ஒருவனைப் போல தள்ளாடிக் கொண்டிருக்கிறாள். அது சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் அப்பால் சென்று, சேனைகளின் யெகோவாவின் வஸ்திரங்களை அடையும் வரை.

92 அப்பொழுது அவள் தன்னுடைய சொந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாட்டின் சுமையின் கீழ் தள்ளாடிக் கொண்டிருக்கிறாள், தன்னுடைய சுய பாதுகாப்புக்காகவும், தன்னுடைய சொந்த வேத சாஸ்திரங்களைக் குறித்தும். “அவர்கள் தேவனுடைய கற்பனைகளை எடுத்துவிட்டு, மனுஷருடைய பாரம்பரியங்களை போதிக்கிறபடியால், அவைகளை அவமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய துதிகளைக் காட்டிலும் மனுஷருடைய புகழ்ச்சிகளையே அதிகம் விரும்புகிறார்கள்.” எங்களுடைய போதகர்கள் வெதுவெதுப்பானவர்களாகி, சபையில் சேர்ந்து கொள்வதை முன்னிலைப்படுத்தி, “அதெல்லாம் சரிதான், நீ சபையைச் சேர்ந்து கொள்ளும் வரை. அதைக் குறித்து மறந்துவிடு” என்று கூறுகின்றனர்.

93 ஆனால், சகோதரனே, தப்பித்துக் கொள்ள தேவன் ஒரு வழியை உண்டுபண்ணினார். நீங்கள் தேவனுடைய நிபந்தனைகளுக்கு வர வேண்டும், அது நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாகவேயாகும். ஏற்கனவே போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமேயல்லாமல் வேறெந்த அஸ்திபாரமும் போடப்படவில்லை, இல்லை, ஒன்றுமில்லை. வேறெந்த அஸ்திபாரத்தின் பேரிலும் கட்டுவது, வைக்கோல் மற்றும் சேற்றைப் போன்றது, வெள்ளம் அதைக் அடித்துச் செல்லும், வீழ்ச்சியும் பெரிதானதாயிருக்கும். ஆனால் இயேசு, “இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள்

அதை மேற்கொள்வதில்லை" என்றார். அவர் அதை எதன் மேல் கட்டினார்? அவர் தேவனுடைய குமாரன் என்னும் ஆவிக்குரிய வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின் பேரில்.

"மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?"

94 "சிலர் 'எலியா' என்றும், சிலர் 'மோசே' என்றும், சிலர் 'யோவான் ஸ்நானன்' என்றும், மற்றவர் என்றும் கூறுகின்றனர்" என்றனர்.

"ஆனால் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.

95 எந்தத் தயக்கமுமின்றி, ஒரு விநாடி கூட நேரம் எடுத்துக் கொள்ளாமல்...பாவியே கவனியுங்கள். அந்தவிதமாகவே நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்கள். அவன் அவரோடு இருந்து வந்தான்; அவர் என்னவாயிருந்தார் என்பதை அறிந்திருந்தான். அதன்பின்னர் அவன் இரண்டாம் முறை சிந்தித்து முடிப்பதற்கு முன்பே, பரிசுத்த ஆவியானவர் அவனைப் பற்றிப் பிடிக்க, அவன், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான்.

96 "யோனாவின் குமாரனகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. நீ இதை யாரோ ஒருவருடைய வேத சாஸ்திரத்திலிருந்து ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லை. நீ ஒருபோதும் ஒரு வேதபாட கருத்தரங்கிலிருந்து வரவில்லை. ஆனால் பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார்.

97 வெள்ளம் வரலாம், அணுகுண்டுகள் விழலாம், எல்லாமும், ஆனால் கிறிஸ்துவுக்குள் பத்திரமாக இருக்கிறவன் அணுகுண்டு புயலை கடந்து செல்வான், வெள்ளப்பெருக்குப் புயலின்போது நோவா பத்திரமாகப் பேழையில் இருந்ததைப் போலவே. ஒரு முறை, உங்களுடைய விசுவாசம் அதற்குள்ளாக விழட்டும், என்ன சம்பவிக்கிறது என்று பாருங்கள்; தேவனுடைய திடமான கன்மலையின் மேல், முன்னடையாளங்களின் மேல். தேவன் தப்பித்துக் கொள்ள ஒவ்வொரு முறையும் ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். அவர் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உண்டாக்க வேண்டும். மூலோபாய நேரம் வரும்போது, தேவன் தேவனாயிருக்கிறார்...

98 யேகோவா-யீரே! *யேகோவா-யீரே* என்பதற்கு, "கர்த்தர் தமக்கு ஒரு பலியை அருளுவார்" என்று பொருள்படுகிறது, ஏனென்றால் கர்த்தர் தமக்காகத் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை அருளுவார். தேவனால் அதை அளிக்க முடியும், ஏனென்றால் அவர் சிருஷ்டிகராயிருக்கிறார். தேவன், ஒருமுறை, கல்வாரியிலே! ஆமென்! அங்கே, பரலோகத்தின் பிரதான தூதர்கள், எல்லா

பிசாசுகளின் மண்டலங்களும் நடுங்கினபோது, பூமியானது ஒரு பதட்டமான நடுக்கத்தை பெற்று, கல்லறையை அசைத்தபோது, சூரியன் நடுங்கி, அங்கே பின்னால் தொங்கி, கருமை நிறமாக மாறி, சந்திரனும் நட்சத்திரங்களும் தங்களுடைய இடத்தை விட்டு அசையும்போது, எல்லா காலங்களிலும் மீட்கப்பட்டவர்கள், காலங்களினூடாக வந்து, அந்த வேளையை அடையாளங்கண்டு கொள்வார்கள்.

99 தேவனுடைய குமாரன் அங்கே மரித்தபோது, சாத்தானுடைய எல்லா வல்லமையையும் அகற்றினார். மரணமும், பாதாளமும், கல்லறையும், எல்லா பயமும் கூட அங்கே கல்வாரியில் விழுங்கப்பட்டது. அவர் உன்னத கிரயத்தைச் செலுத்தினபோது, ஆட்டுக்குட்டியானவர் மரித்தபோது, அவருடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டன, அவர் பாவத்தைச் சுமப்பவனாயிருந்தார், அவர்கள் எங்கிருந்தனரோ அங்கே அவர்களை நரகத்திற்குக் கொண்டு சென்றார். தேவன் அவரை மூன்றாம் நாளில் எழுப்பினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையின் பேரில், நாங்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்றே விசுவாசிக்கிறோம். ஆமென். தேவன் தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணுகிறார்.

100 ஓ, சகோதரனே, நீங்கள் காண்கையில்...நோயாளர் ஊர்த்தி சத்தமிட்டு செல்வதைக் கேட்கும், ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒன்றைக் கேட்கும்போது, நீங்கள் அந்தவிதமாகச் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு அது ஒரு அறிகுறியாக இருக்கிறது. ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு கல்லறையைக் கடக்கும்போது, அது ஒரு அடையாளமாயுள்ளது. நீங்கள் அந்தவிதமாகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் முகத்தில் சுருக்கமும், தலையில் ஒரு நரைமுடி தோன்றும்போதும், அது ஒரு அடையாளமாகும். நீங்கள் அந்த வழியில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

101 ஆகையால், பவுல் இந்தவிதமாக அந்த உண்மையான நம்பிக்கை தனக்குள் வேரூன்றி, அடித்தளமிட்டிருந்ததைக் கூற முடிந்ததில் வியப்பொன்றுமில்லை. என்னே! அவன் பாதையின் முடிவிற்கு வந்தபோது, அவன், “நான் ஒரு நல்ல போராட்டத்தைப் போராடினேன். நான் ஓட்டத்தை முடித்தேன். நான் விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இனிமேல் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும்” என்றான்.

102 நீங்கள் இந்தப் பழைய ஜீவியத்தைக் குறித்து சுகவீனமாயும், சோர்வுற்றவர்களாயும் இருக்கும்போது, நீங்கள் மேஜையில் உள்ள உங்களுடைய உணவை நேசிப்பதைக் காட்டிலும் கர்த்தராகிய

இயேசுவின் பிரசன்னமாகுதலை நீங்கள் நேசிப்பீர்கள், அல்லது உங்களுடைய மனைவி, அல்லது உங்களுடைய பிள்ளைகள், அப்பொழுது உங்களுக்காக ஒரு கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு கிரீடம், உங்களுடைய சிரசின் மேல் ஒரு பொன் கிரீடம் அணிவிக்க அல்ல. ஆனால் ஒரு சரீரம் வேதனையிலிருந்து விடுதலையடைந்து...தேவனுடைய மகிமைக்குள் முடிசூட்டப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் அழியாமையில் முடிசூட்டப்பட்டது. அதுதான் உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிறது நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை உங்களுக்குத் தருவார். அந்த நாளுக்காகவே நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவருக்காகவும் தேவன் தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணியிருக்கிறார். நிச்சயமாகவே அவர் உண்டுபண்ணியிருக்கிறார்.

103 தேவனுடைய பிள்ளையான தீர்க்கதரிசியாகிய தானியேல் ஒரு சிங்கங்களின் கெபியில் தள்ளப்பட்டபோது, தானியேல் உண்மையுள்ளவனாயிருந்து, ராஜா கூறினதற்கு பயப்படாமல் தன்னுடைய ஜன்னல்களை உயர்த்தினான். மேலும்...ஜெபித்தபோது, என்ன அறிவிக்கப்பட்டதோ அதைப் பொருட்படுத்தாமல், தானியேல் எப்படியாயினும் எருசலேமுக்கு முகமுகமாய் நின்று ஜெபித்தான். ஜனங்கள், சர்வாங்க தகனபலி செலுத்தப்பட்ட நகரமான, எருசலேமை நோக்கி ஜெபித்தால்...அந்தக் காரணத்தினால்தான் தானியேல் அந்த வழியாய் நோக்கிப் பார்த்து ஜெபித்தான், ஏனெனில் கர்த்தர் ஏற்கனவே, “ஜனங்கள் எந்த நேரத்திலும் தொல்லையிலிருந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை நோக்கிப் பார்த்து ஜெபித்தால், அப்பொழுது கேட்பதாக...நான் பரலோகத்திலிருந்து கேட்பேன்,” என்றார், சாலமோன் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தபோது.

104 அந்தக் காரணத்தினால்தான் யோனா விசுவாசத்தை உடையவனாயிருந்தான், அவன் கடல் களைகள் தன்னுடைய கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்தபோது, மீன் வயிற்றின் வாந்தியில், ஆழமான சமுத்திரத்தில் ஒரு புயலார்ந்த சமுத்திரத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன், “அவைகள் பொய்யான மாயைகளாயிருக்கின்றன. ஆனால் நான் இன்னும் ஒருவிசை தேவனே, உம்முடைய பரிசுத்த ஆலயத்தை, நோக்கிப் பார்ப்பேன்” என்றான். தேவன் ஏதோ ஒரு காரியத்தைச் செய்தார். அவர் யோனாவிற்காகத் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உண்டுபண்ணினார். அவர் என்ன செய்தார், எவருமே அறியார். அது தேவனுடைய சொந்த இரகசியமாயுள்ளது.

105 ஆனால் அது கூடாததாயிருந்த போதிலும், தேவனால் சூழ்நிலைகளை மாற்ற முடியும். அவரால் கூடாத காரியத்தை நடக்கக் கூடியதாக ஆக்க முடியும். நிகழக்கூடியது மாத்திரமல்ல, ஆனால் அதை உண்மையாக்க முடியும், மனிதர்கள் தேவனை

அவருடைய வார்த்தையின் பேரில் ஏற்றுக்கொண்டு, தேவன் மனிதனுக்கு அருளியிருக்கிற வழியை ஏற்றுக் கொள்ளும்போது.

106 தேவன் ஏதோ ஒரு காரியத்தைச் செய்தார். அவர் அங்குப் பிராணவாயு கூடாரத்தை அமைத்திருக்கலாம். அவர் அந்த மீனினுடைய வயிற்றில் என்ன செய்தார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர் யோனாவை மூன்று இரவும் பகலும் ஒரு மாதிரியாகவே அங்கே வைத்திருந்தார், கிறிஸ்து பிராணவாயு இல்லாமல் பூமியின் வயிற்றில் கிடப்பார் என்றும், மூன்றாம் நாளில் அவர் மீண்டும் வெளியே வருவார். அது ஒரு மாதிரியாயிருந்தது. அவர் தப்பித்துக்கொள்ள ஒரு வழியை உண்டுபண்ணினார். அவர் எப்பொழுதுமே அதைச் செய்வார்.

107 தானியேல் அங்கே நின்றபோது, சிங்கங்கள் அவனண்டை ஓடி வந்து கொண்டிருந்தபோது, அந்த வயோதிக பரிசுத்தவானின் இருதயத்தில் எந்தப் பயமும் இல்லை. ஆனால் அவன் அங்கேயே நின்றான், தேவன் அவனோடு முடிக்கப்படவில்லை. சிங்கங்கள் அவனைப் பிடித்துக் கொள்வதற்கு சற்று முன்பு, ஒரு தூதன் அவர்களுக்கு முன்பாகப் பரவினார், தமஸ்குவுக்குப் போகும் வழியில் தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு பிரத்தியட்சமான அதே எரிகிற ஒளி என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

108 ஒரு பெரிய ஒளி பிரகாசித்தது. அவர்கள் நோக்கிப் பார்த்து, என்ன சம்பவித்துக்கொண்டிருந்தது என்பதை அறியாதிருந்தனர். சவுல் தன்னுடையக் குதிரையிலிருந்து விழுந்தான். அப்பொழுது ஒளியிலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, “சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?” என்று கேட்டது.

அவன், “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்டான்.

அவர், “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே” என்றார்.

109 தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவர்களாயிருந்த எபிரெய பிள்ளைகளே, அங்கே அக்கினிச் சூளைக்குள்ளாகக் கிடந்து…இல்லை சரியாகக் கூறினால் பாபிலோனில் அக்கினிச் சூளைக்கு சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கும் மரணத்திற்கும் இடையே ஒரு படி இருந்தது.

110 இன்றிரவு இங்குள்ள மனிதர்களுக்கு அது எவ்வளவு உதவியாயிருக்கும். உங்களுக்கும் நித்திய பிரிவினைக்கும் ஒரு நாள் இருக்கலாம். நீங்கள் இப்பொழுது உங்களுடைய தீர்மானத்தை எடுக்கப் போகிறீர்கள். நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களேயானால், அதற்கான வழி உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. “ஒரு அடி,” என்றான் யோனத்தான் தாவீதிடம், அவர்கள் அந்த வில்லை எய்தபோது, “மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது” என்றான்.

111 அவர்களுக்கும் மரணத்திற்கும் இடையே ஒரு படி உள்ளது. ஆனால் அந்த முக்கியமான நேரத்தில், தேவன் தப்பித்துக்கொள்ள

ஒரு வழியை அருளினார், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அந்த அக்கினிச் சூளைக்குள் அனுப்பி, அவர்களிடத்திலிருந்து அக்கினி இறங்காமல் காத்துக்கொண்டார்.

112 ஏனோக்கு தான், ஐநூறு ஆண்டுகளாகத் தேவனுடன் சஞ்சரித்தான் என்றும், அவன் "தேவனைப் பிரியப்படுத்தினான்" என்றும் உரிமை கோரினான். அவன் "மரணத்தைக் காணமாட்டான்" என்ற ஒரு விசுவாசத்தை உடையவனாயிருந்தான். தேவனால் எப்படி அதைச் செய்ய முடியும்? அந்நாட்களில் அவனை மேலே கொண்டு செல்ல ஒரு ஜெட் விமானம் கூட இல்லை. ஆனால் தேவன் ஒரு வழியை, ஒரு மறுரூபமாகுதலை அளித்தார், அது மரணத்தைப் பெறாமலேயே, ஏனோக்கை பூமியிலிருந்து மகிமைக்கு கொண்டு சென்றது.

113 அது எலியா சமுத்திரத்தைக் கடந்து…இல்லை யோர்தான் நதியைக் கடந்தது, அதை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு பிரிப்பதன் மூலம். எலியா மரிக்காமல் பரலோகத்திற்கு செல்ல ஆயத்தமாயிருந்தபோது, தேவன் அவனுக்காக ஒரு வழியை அருளினார். ஒரு ஜெட் விமானம் அல்ல, ஆனால் அவர் ஒரு அக்கினி இரதத்தை அனுப்பினார், அக்கினிமயமான குதிரைகளினால் ஓட்டப்பட்டது. மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள தேவன் அந்த நிமிடத்தில் வழியை அருளினார்.

114 நான் நினைக்கிறேன், இஸ்ரவேல் புத்திரரைப் பின்பற்றின மோசே…இல்லை அவர்களை வழி நடத்தினவன், அந்த ஒளியை, அக்கினி ஸ்தம்பத்தை, வனாந்திரத்தினூடாகப் பின்தொடர்ந்தான். மோசே முடிவுபரியந்தம் நிலைத்திருந்தான். அது மோசே, நூற்றிருபது ஆண்டுகள், தேவனுக்காக எண்பது ஆண்டுகள் ஊழியம் செய்து, அவன் மலையின் மேல் நின்று, அவனுடைய கன்னங்களில் கண்ணீர் விழுந்தோட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கிப் பார்த்தான், ஒரு வயோதிக மனிதனாக, நூற்று இருபது வயதுடையவனாயிருந்தான். அவன் முட்புதர்களின் வழியாக வந்திருந்தான். அவன் ஆழமான தண்ணீரில் அலைந்திருந்தான். அவன் கசப்பான பாத்திரத்தையும், பித்தப் பாத்திரத்தையும், துயரத்தையும் ருசி பார்த்திருந்தான். அவன் கீழ்ப்படியாத ஜனங்களோடு அவர்களுடைய போதகராக இருந்து வந்தான். அவன் அவர்களை இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வழி நடத்தி, அவர்களுடைய முறுமுறுப்புகளை பொறுத்துக் கொண்டான். அப்பொழுது தன்னைத்தானே திறப்பின் வாயிலே நின்று, "தேவனே, நீர் அவைகளைச் செய்வதற்கு முன்பு என்னை எடுத்துக் கொள்ளும்" என்றான்.

115 அங்கே மோசே ஒரு வயோதிக மனிதனாக நின்றான், அவன் ஒவ்வொரு விதத்திலும் கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரியாயிருந்தான் என்பதை அறிந்திருந்தான், எப்படியாவது, ஏதோ ஒரு வழியில், தேவன் அவனை நிச்சயமாக எடுத்துக்கொள்வார் என்பதை

அறிந்திருந்தான், ஏனென்றால் கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரியாக, அவர் அவனை மீண்டும் கொண்டு வர வேண்டியதாயிருந்தது. அவன் ஒரு தீர்க்கதரிசியாக, கிறிஸ்துவாகப் பிறந்தான். ஒரு தீர்க்கதரிசி மாத்திரமல்ல, ஆனால் ஒரு தலைவனைப், போன்றவன். அவன் நாணலுக்குள் மறைக்கப்பட்டிருந்தான், கிறிஸ்துவும் எகிப்தில் கொண்டு செல்லப்பட்டார். கிறிஸ்து ஒலிவ மலையில் இருந்ததுபோல, அவன் சீனாய் மலையில் இருந்தபோது ஒரு நியாயப்பிரமாணிகனாயிருந்தான். ஒவ்வொரு வகையிலும் அவன் கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரியாயிருந்தான்.

116 அவன் வயோதிகனாயிருந்தபோது, மரணம் அவன் முகத்தில் நோக்கியபோது, அவன் எப்படி உயிர்த்தெழுதலைப் கொண்டுவருவான்? ஆனால் முக்கியமான நேரம் வந்தபோது, தேவன் ஒரு வழியை அருளினார். சுவாசம் வெளியேறிக் கொண்டிருந்தபோது, அவனது கழுத்தில் குரல் கலங்கிக் கொண்டிருந்தது, அவன் தனது பக்கத்தில் படுத்திருந்தபடி பார்த்தான், அங்கே அந்தக் கன்மலை நின்றிருந்தது. தேவன் ஒரு கன்மலையை அருளினார். அந்தக் கன்மலை வனாந்திரத்தில் இருந்த கிறிஸ்து இயேசுவாயிருந்தது. மோசே கன்மலையண்டை நிலைத்திருந்தான்.

117 தேவனே, அதே காரியத்தில் நிலைத்திருக்க எனக்குக் கிருபையைத் தாரும், என்னுடைய ஜீவ சுவாசம் இந்தச் சரீரத்திலிருந்து எடுக்கப்படும்போது, அங்கே அந்தக் கன்மலை நிற்பதை நான் காணட்டும்.

118 அவன் கன்மலையின் மேல் அடியெடுத்து வைத்தபோது, தூதர்கள் வந்து அவனைத் தூக்கிச் சென்றனர். எண்ணூறு ஆண்டுகள் கழித்து, அவன் எலியாவோடு, பாலஸ்தீனாவில் நின்றுகொண்டு, அங்கே சிலுவைக்கு முன்பு, இயேசுவிடம் பேசிக்கொண்டிருந்தான். தேவன் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உண்டுபண்ணினார்.

119 பழைய ஏற்பாட்டில் உள்ள இரண்டு மகத்தான காரியங்கள், தீர்க்கதரிசனங்களில் என்னால் காண முடிகிற இரண்டு பெரிய பிரிவுகள் இவையாயிருந்தன. மேசியா வரும் காலம்வரை ஜனங்கள் எதிர்நோக்கியிருந்தனர். அதன்பின்னர், மேசியாவின் வருகைக்குப் பிறகு, பரிசுத்த ஆவியானவர் வருவார் என்ற ஒரு நேரத்தை அவர்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

120 முடிவிலே, உரிய நேரத்தில், அவர்களுக்குக் கிடைத்திருந்த எல்லாவிதமான முன்னடையாளங்களையும், தீர்க்கதரிசிகள் மூலமாகவும் மற்றவற்றின் மூலமாகவும், எல்லா மாதிரிகளையும், பாவநிவிர்த்திகளையும் அவர்கள் பெற்றிருந்தனர், முடிவிலே மேசியா வந்தார், தேவன் அவ்வண்ணமாய் கூறியிருந்தபடியால் அது தீர்க்கப்பட்டது.

121 அதன்பின்னர் அவர்கள், “ஒரு மகத்தான மகிமையான கறைதிரையற்ற சபையை, அது ஒரு நட்சத்திரமாகப் பூமியில்

பிரகாசிக்கும்," ஒரு நேரத்தை எதிர்நோக்கியிருந்தனர், அவர்கள் அந்த நேரத்தை எதிர்நோக்கியிருந்தனர். அது எப்படி இருக்கப் போகிறது? அவர் மூன்று இரவும் பகலும் மரித்திருந்தார். அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார். அவர் ஐந்நூறு பேர்களுக்குக் தரிசனமாகி, பரலோகத்திற்கு ஏறிச் சென்றார். அவர் அவர்களை இங்கே பூமியில், தனியே விட்டுவிட்டார். தலைவர் மரித்துப் போனபோது, அது எப்படி இந்த மகிமையான சபையாக இருக்க முடியும்? தேவன் சபைக்கு வாக்குத்தத்தம் செய்தார். அவர் சென்றபிறகு, அவருடைய ஸ்தானத்தில் பிரகாசிக்கக்கூடிய வெளிச்சம் எப்படி இருக்க முடியும்?

122 அவர் அங்கே, "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது; அதே சமயத்தில் நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உங்களோடும், உங்களுக்குள்ளும், உலகத்தின் முடிவுபரியந்தம் இருப்பேன். நான் செய்கிற கிரியைகளை நீங்களும் கூடச் செய்வீர்கள். நீங்கள் உலகமெங்கும் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள்பின் தொடரும்" என்றார்.

123 கிறிஸ்து அவர்களுக்கு இல்லாத நிலையில், அவர்களால் எப்படி அதைச் செய்ய முடியும்? தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தத்தை அளித்திருக்கும்போது, அவர்களால் எப்படி அதைச் செய்ய முடியும்? ஆனால், பாருங்கள், தேவன் ஒரு பெந்தெகொஸ்தேயை அருளினார், பரிசுத்த ஆவியானவர் நேரில் இறங்கி வந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவிர்த்திக்காக அவர்கள் சுத்தமாக்கப்பட்டப் பிறகு, சாவுக்கேதுவான மனிதனுடைய சரீரத்தை எடுத்துக் கொண்டார். பரிசுத்த ஆவியானவர் அந்த நபரைத் தன்னுடைய சொந்த கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, அடையாளங்களோடும், அற்புதங்களோடும் அவனை அனுப்பினார். தேவன் ஒரு வழியை அருளினார். அவர்கள் தாங்களாகவே அதைச் செய்ய முடியவில்லை. அவர்கள் உங்களையும் என்னையும் போன்ற மனிதர்களாய் இருந்தனர். அவர்களால் எப்படி அதைச் செய்ய முடியும்? அவர்களால் முடியாது. ஆனால் தேவன் தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியை அருளினார்.

124 அவர்கள்…?…மேலறையில், ஜனங்கள் அவர்களைப் பரிகசிப்பார்கள் என்று அவர்கள் எண்ணினர். அவர்கள் *இதுவாகவோ, அதுவாகவோ* அல்லது *மற்றதாகவோ* இருப்பார்கள் என்று அவர்கள் எண்ணினர். அவர்கள் ஜன்னல்கள் யாவும் மூடியிருந்தனர், கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. எப்படி அவர்களால் அதைச் செய்ய முடிந்தது? அவர்கள் கோழைகளாயிருந்தனர். அவர்களுக்கு முதுகெலும்பே இல்லாதிருந்தது. அவர்கள் உண்மையான பரிசுத்த ஆவியின் ஒரு முதுகெலும்பு இல்லாமல், ஒரு கோழியின் கவையெலும்பை உடையவர்களாயிருந்தனர். அவர்கள் கதவுகளைப் பூட்டி வைத்திருந்தனர். அவர்கள் பயமடைந்தனர்.

அவர்கள் வெளியே நடந்து சென்று பொதுமக்களை எதிர்கொள்ள வெட்கப்பட்டனர். அவர்களால் எப்படி அதைச் செய்ய முடிந்தது?

125 ஆனால் தேவன் ஒரு பெந்தெகொஸ்தேயை, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அனுப்பினார். அவர்கள் ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்து, தெருக்களுக்குச் சென்றனர். தேவன் அதை வாக்களித்துள்ளார். தேவன் வாக்குத்தத்தம் பண்ணும்போது, தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்வார். அவர் தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணுவார். நீங்கள் தப்பித்துக் கொள்ளும்படியான வழியை உண்டாக்காத எந்தச் சோதனையிலும் தேவன் உங்களைச் சோதிக்கப்படும்படி அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். அவர் அதைச் செய்வார்.

126 நாம் இங்கு இருக்கிறோம், நாம் ஒரு மப்பும் மந்தாரமுமான, மேகமூட்டமான நாளினூடாக வாழ்ந்திருக்கிறோம். சபையானது பாதி உள்ளேயும், பாதி வெளியேயும் உள்ளது. அவர்களால் எப்படி *இதைச்* செய்ய முடியும் என்றும், எப்படி அவர்களால் செய்ய முடியும்? என்றும் அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிச்சம் இல்லாதிருந்தது. ஆனால் தீர்க்கதரிசியோ, "சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும்" என்றான். அது எப்படி இருக்க முடியும்? நாம்…இந்நாளில் சபையானது, இங்கே பூமியில் இருக்க வேண்டிய அந்த மகிமையான சபை, இயேசுவானவர் ஒரு மகிமையான சபையைப் பெற்றுக்கொள்ள வரும்போது, நாம் பின்மாரியை, ஊற்றுதலைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியின் இரட்டிப்பான பங்கு பூமியின் மேல் வந்து கொண்டிருக்கிறது, ஒவ்வொரு தேசத்தையும் ஆட்கொள்கிறது, எழுப்புதல் அக்கினிகள் ஒவ்வொரு மலையின் மேலும் எரிந்துகொண்டிருக்கின்றன. சீனாவிலும், ஜப்பானிலும், கொரியாவிலும், இருண்ட ஆப்பிரிக்காவிலும், எல்லாவிடங்களிலும், பரிசுத்த ஆவியானது ஜனங்கள் மேல் ஊற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. தேவன் ஒரு வழியை உண்டுபண்ணினார்.

127 என்னுடைய குருடான கண்கள் எப்படி சுகமாக்கப்பட்டன? தேவன் ஒரு வழியை உண்டுபண்ணினார். அல்லேலூயா! ஆம், ஐயா.

128 அவர் எப்பொழுதுமே ஒரு வழியை உண்டுபண்ணுவார். இன்றைக்கு பூமியில் உள்ள உங்களுக்காக, ஆறுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற உங்களுக்கு, பரதேசிகளும், அந்நியர்களுமாகிய நீங்கள் தாவீதைப் போல இருங்கள்.

129 தாவீது யுத்தத்திற்கு சென்றுகொண்டிருந்தான். அவன் குழப்பத்துடன் செல்லவில்லை. அவன் ஒரு அரை வழிக் குறியோடு செல்லவில்லை. அது ஒருக்கால் அதைச் செய்யும் என்று அவன் நினைக்கவில்லை. ஆனால் அவன் முசுக்கட்டை செடிகளின் புதரில் காத்திருந்தான், சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கே மரண அமைதி

நிலவியது, எதுவும் நடக்கவில்லை. சிறிது நேரம் கழித்து, மிகத் தொலைவில், இலைகள் சத்தமிட தொடங்குவதை கேட்டான், சத்தம், மேலும் மேலும் பெரிதாகக் கேட்டது. சிறிது நேரம் கழித்து, ஒரு பெரிய காற்று அவருக்கு முன்பாகச் சென்றது. அது தேவன் என்றும், பரிசுத்த சேனையான தூதர்கள் அவனுக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்தனர் என்பதை அவன் அறிந்தான். அவன் தன்னுடைய பட்டயத்தை உருவி, யுத்தத்தில் ஈடுபட்டு, சத்துருவை ஓடச் செய்தான்.

130 சகோதரனே, நீங்கள் செல்ல இன்னும் சரியாக இருக்கவில்லை என்றால், ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு குதித்து எழுந்திடாதீர்கள். நில்லுங்கள்! அது ஒரு சபையில் சேர்ந்து கொள்ளுதல் அல்ல, பிரசங்கியாருடன் கைகுலுக்குதல் அல்ல, அது தண்ணீரில் ஞானஸ்நானம் பண்ணப்படுதல் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆனால் அது தேவனால் அருளப்பட்ட பலியாகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் இருதயத்திற்குள் ஒரு நபராக ஏற்றுக்கொள்வதாகும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு முன்பாக ஒரு பலத்த காற்று அடிப்பதைப் போல, வழியில் உள்ள ஒவ்வொரு காரியத்தையும் அகற்றுவார். ஆமென். அதுதான் இது. அப்படியானால் கிறிஸ்தவர்களாக இருங்கள். வழியில் உள்ள நீங்கள் உண்மையான தேவபயமுள்ள மனிதர்களாயிருங்கள்.

131 இங்கே ஒரு எழுப்புதல், வெகுசீக்கிரத்தில், ஒரு பெரிய கூடாரக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. என்னால் அதைக் காண முடிகிறது. சரியே! நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? உங்களைத் நடத்திக் கொள்ளுங்கள்…

132 இங்கே சில காலத்திற்கு முன்பு, தென் தேசங்களில், ஜனங்கள் சென்று அடிமைகளை வாங்குவது போன்ற காரியங்களை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நான் இந்தச் சிறு கதையைச் சற்று யோசித்துப் பார்க்க நேர்ந்தது. அவர்கள் அடிமைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு போகையில், அந்தப் பரிதாபமான நபர்கள் அடிக்கப்பட்டதை அவர்கள் கவனிப்பார்கள். அவர்கள் தங்களுடைய தேசத்தை விட்டுச் செல்வதை வெறுத்தனர், அவர்கள் ஒருபோதும் திரும்பி வரமாட்டார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். கறுப்பின ஜனங்கள், அவர்கள் எப்படி நடத்தப்பட்டனர் என்பது பரிதாபகரமாக இருந்தது.

133 ஒரு நாள் அவர்கள் ஒரு வாலிப நபர் நிமிர்ந்த தோள்பட்டைகளுடன் இருப்பதை கவனிக்க நேர்ந்தது. அவர்கள் அவனை அடிக்க வேண்டியதில்லை. இல்லை ஐயா. யாரோ ஒரு வாங்குபவர் வந்து, “நான் அந்த அடிமையை விலைக்கு வாங்கட்டும்” என்றார்.

அவர், “அவன் விற்பனைக்காக இல்லை” என்றார்.

134 அவர், "சரி, அவனை மிகவும் வித்தியாசப்படுத்துகிறது எது? மற்றவர்களுக்கு அவன் முதலாளியா?" என்று கேட்டார்.

"இல்லையே" என்றார்.

135 "அவனை வித்தியாசமாக்குகிறது எது? நீங்கள் அவனை நன்றாகச் சாப்பிட அனுமதிக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை. அவன் மற்றவர்களோடு சாப்பிடுகிறான்" என்றார்.

"அவனை மிகவும் வித்தியாசப்படுத்துகிறது எது?" என்று கேட்டார்.

136 "அவனுடைய தகப்பனார் கோத்திரத்து ராஜா என்பதை நான் அறிய நேர்ந்தது. அவன் ஒரு தூர தேசத்தில் இருந்தாலும், அவன் தன்னுடைய தோள்பட்டைகளை இன்னமும் நிமிர்த்தி இருக்கிறான். அவன் ஒரு ராஜரீகமாகப் பிறந்த மனிதன். அவனுடைய தந்தை ஒரு ராஜாவாயிருக்கிறார். அவன் ஒரு அந்நியனாயிருந்தாலும், அவனுடைய தகப்பன் ஒரு ராஜாவாயிருக்கிறார்" என்றார்.

என் பிதா வீடுகளாலும், நிலத்தாலும்
ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார்,
அவர் உலகத்தின் செல்வத்தைத் தம்முடைய
கரத்தில் வைத்திருக்கிறார்!
மாணிக்கக் கற்கள், வைரம், வெள்ளி, பொன்,
அவருடையப் பெட்டிகள் நிறைந்திருக்கின்றன,
அவர் சொல்ல முடியாத ஐஸ்வரியங்களை
உடையவராயிருக்கிறார்.

137 இந்தக் கூடாரத்தின் ஜனங்களாகிய நாம், உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவின் பிழையற்ற ஆதாரத்தை உடையவர்களாயிருக்கிறோம், தேசம் முழுவதும் பரவிய ஒரு எழுப்புதலோடு; இந்தவிதமான ஒரு தாழ்மையான சிறு இடத்திலிருந்து, பெத்லகேமின் முன்னணையைப் பார்க்கிலும், அநேகமாக இன்னும் தாழ்மையுள்ளதாயிருந்தது. ஆனால் இங்கே, தேவன் ஒரு மகத்தான எழுப்புதலை அனுப்பியிருக்கிறார், தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பல்லாயிரக்கணக்கானவர்களை, ஆம், இலட்சக்கணக்கானவர்களைத் அனுப்பியிருக்கிறார்.

138 நீங்கள் எங்களோடு ஒரு சக குடிமகனாக இருக்க விரும்புகிறீர்களா? பாவியே, உன்னுடைய அலட்சியத்தை தூக்கியெறிந்துவிட்டு, உன்னுடைய பாவமுள்ள ஜீவியத்தை தூக்கியெறிய நீ இன்றிரவு ஆயத்தமாயிருக்கிறாயா? உங்களுடைய தோள்களை நிமிர்த்தி, இந்த இராணுவ வரிசையில் சேர்ந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவிர்த்தி சகல பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கிறது என்று விசுவாசித்து, பவனி சென்று கொண்டிருங்கள்.

நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், நாம் ஜெபிப்போமாக.

139 எங்கள் தயவுள்ள பரலோகப் பிதாவே, இன்றிரவு, நாங்கள் உம்பேரில் காத்திருக்கையில், தேவனுடைய மகத்தான பரிசுத்த ஆவியானவர் இந்தக் கூட்டத்தினூடாக அசைவாடி, மிகவும் அபரிமிதமாகச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். நாங்கள் இப்பொழுது ஆயத்தமாகிக்கொண்டிருக்கையில், இராபோஜனம் எடுப்பதற்கு முன்னதாக, ஓ, பிதாவாகிய தேவனே, இன்றிரவு பாவிகளுடைய இருதயங்களிடத்தில் நீர் பேச வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தாவே, அவர்கள் அடிப்படையில் உணர்ச்சிவசப்படுதலின் பேரில் அல்ல, ஏதோ ஒரு சோகமான சம்பவத்தின் பேரில் அல்ல, ஆனால் உண்மையாகவே கலப்படமற்ற தேவனுடைய வார்த்தையின் பேரில் வரட்டும். “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”

140 தேவனே இன்றிரவு பரிசுத்த யோவான் 5:24-ல் உள்ள கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகள் ஒவ்வொரு இருதயத்திலும் ஒலிக்க அருள்புரியும். “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.” இயேசு கிறிஸ்துவின் நாமத்தினூடாகப் பரிசுத்த ஆவிக்காக நாங்கள் காத்திருக்கையில், இந்த வேளையில் அநேகர் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து செல்வார்களாக.

141 உங்களுடைய தலைகள் வணங்கியிருப்பதோடு. சகோதரி இசைக்கும்போது, நான் யோசிக்கிறேன்…ஒவ்வொருவரும், கிறிஸ்தவர், ஜெபத்தில் இருங்கள். தேவனிடத்தில் உங்களுடைய கரத்தை உயர்த்த ஒரு மனிதனோ, ஸ்திரீயோ, பையனோ அல்லது ஒரு பெண்ணோ இருக்கிறீர்களா? எனக்கு அல்ல. மேலும், “சரியாக இது…தேவனே, உங்களிடம் கூறும்படி நான் என் கரத்தை உயர்த்துகிறேன், நியாயத்தீர்ப்பு பூமியை தாக்க ஆயத்தமாயிருக்கிறது என்று நான் நம்புகிறேன். நான் இந்த நியாயத்தீர்ப்பின் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டிருக்கிறேன். நான் தேவனிடத்திலிருந்து, சபையின் பிரசன்னத்திலிருந்து, கிறிஸ்தவ ஜனங்களின் பிரசன்னத்திலிருந்து பிரிக்கப்பட வேண்டும். நான் ஒரு நித்திய நரகத்தில் என்றென்றைக்குமாய் வாதிக்கப்பட வேண்டும். ஆனால், இன்றிரவு, நான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று, உம்முடைய ஆவி என்னிடத்தில் பேசுவதை நான் உணருகிறேன். ஏனென்றால், இயேசு, ‘பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்’ என்றார். நான் இப்பொழுது கிறிஸ்துவை என்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்ற ஒரு விநோதமான ஈர்ப்பை என்னுடைய இருதயத்தில் இருப்பதை நான் உணருகிறேன். தேவனே, நான் என்னுடைய கரத்தை உம்மண்டை உயர்த்தி, நான்

இப்பொழுது உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன், என்னுடைய பொல்லாங்கான, இழிவான பாவங்களுக்காக நீர் அளித்த பலி. இப்பொழுது நான் என்னுடைய கரங்களை உம்மண்டை உயர்த்துகிறேன்." நீங்கள் அதைச் செய்வீர்களா?

142 இங்குள்ள மனிதனோ அல்லது பெண்ணோ, பையனோ அல்லது பெண்ணோ, இந்த நேரத்தில், உங்களுடைய கரங்களை உயர்த்தி, "இதன் மூலம், நான் இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை என்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறுங்கள். உங்களுடைய தீர்மானத்தை நீங்கள் ஒரு நிமிடம் எடுக்கும் வரை காத்திருக்கிறேன். அப்படியே உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். சிறு பையனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது உங்களுடைய கரத்தை உயர்த்தி, கூறுங்கள்...என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி, நீங்கள் அதைத் தேவனுக்கு அளித்துக்கொண்டிருக்கிறீர்கள், என்னிடத்தில் அல்ல.

143 "விசுவாசித்தவர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற்று, சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்." மூவாயிரம் பேர்கள் இரட்சிக்கப்பட்டனர்.

இரத்தத்தினால் நிறைந்த ஒரு ஊற்று உண்டு,

144 நிச்சயமாக. நீங்கள் விசுவாசத்தினாலே மூழ்கி, "தேவனாகிய கர்த்தாவே, இப்பொழுது நான் கட்டவிழ்க்கிறேன். ஓ, நான் பலமுறை பீடத்தண்டை சென்றிருக்கிறேன். நான் *இதை*, *அதைச்* செய்திருக்கிறேன், அல்லது நான் சபையில் சேர்ந்துள்ளேன். நான் கோபாக்கினைக்கு தப்பிக்க முயற்சித்திருக்கிறேன். ஆனால், இன்றிரவு, இயேசு கிறிஸ்து என்னுடைய ஸ்தானத்தில் மரித்தார் என்பதன் பேரில், அவர் பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியாயிருந்தார் என்பதன் பேரில், நான் இந்த வழியாக வருகிறேன். அவர் போக்காடாக இருந்தார். அவர் எல்லாமுமாயிருந்தார். அவருக்குள் நான் முழுமையாய் இருக்கிறேன். அவர் என்னுடைய பாவங்களைச் சுமந்தார். அவர் கல்வாரியில் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். அவர் தேவனுடைய கோபாக்கினையின் கீழ் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். அவர் தேவனுடைய தண்டனையின் கீழ் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். அவர் என்னுடைய ஸ்தானத்தை பாதாளத்தில் எடுத்துக்கொண்டார். நான் ஒரு தேவனுடைய குமாரனாகும்படிக்கு, பரலோகத்தில் அவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள, நான் இப்பொழுது அந்த அடிப்படையின் முறையை ஏற்றுக் கொள்கிறேன். ஒரு பாவியாக, நான் விசுவாசிக்கிறேன்" என்று கூறுவீர்களா? [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]

பாவிகள் வெள்ளத்தில் மூழ்கும்போது,
தங்களுடைய எல்லா குற்றமுள்ள கறைகளையும்
போக்குகின்றனர்.

தங்களுடைய எல்லா…

145 சபையே, யாரோ ஒருவர் கர்த்தருக்காகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கையில், ஜெபத்தில் இருங்கள். ஜெபியுங்கள். எவ்வளவு இழக்க? அவர்களுடைய எல்லா குற்றக் கறையும் போக்குகின்றனர். யூதன், புறஜாதி, அடிமை அல்லது சுயாதீனன், பாவி அல்லது ஒரு சபை அங்கத்தினர், குருவானவர், வைத்தியர், வழக்குரைஞர், நீங்கள் யாராயிருந்தாலும், கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்களுடைய எல்லா குற்ற கறையையும் போக்கிக்கொள்ளுங்கள். நாம் இப்பொழுது மெதுவாகப் பாடுகையில், இந்த வசனத்தைக் கேளுங்கள்.

மரித்துக்கொண்டிருந்த திருடன் அதைக் கண்டு
களிகூர்ந்தான்
அந்த ஊற்று…

146 பாதையின் முடிவில் எல்லா நம்பிக்கையும் போய்விட்டன, அங்கே ஒரு ஊற்று பிரசன்னமானது. இன்றிரவு நீங்கள் உங்களுடைய சொந்த சித்தத்தின் முடிவில் இருக்கிறீர்களா?

பாவிகள் கீழே மூழ்கினர்…
தங்களுடைய எல்லா குற்றக் கறையையும்
போக்குகின்றனர்.
தங்களுடைய எல்லா குற்றக் கறையையும்
போக்கிக்கொள்ள,
இழக்க…

147 இப்பொழுது, பரலோகப் பிதாவே, இவையனைத்தும் உம்முடைய கரங்களில் உள்ளது. ஒரு வயோதிக மனிதனும் வாலிப பையனும் தங்களுடைய கரங்களை உயர்த்தி, அவர்கள் உம்மை ஏற்றுக்கொள்ள விரும்பினர், வார்த்தையினூடாக ஊற்று திறக்கப்பட்டிருக்கையில். கர்த்தாவே, பரிசுத்த ஆவியானவரே, உம்முடைய ஐக்கியத்தை நாங்கள் பாராட்டுகிறோம்.

148 ஒருக்கால் அவர்கள் எல்லோருமே கிறிஸ்தவர்களாயிருக்கலாம், எல்லோரும் பாதுகாப்பாக இருக்கலாம். கர்த்தாவே, அவர்களுடைய இருதயங்களை நீர் அறிந்திருக்கிறீர். அவர்கள் இரக்கத்திற்கும் நியாயத்தீர்ப்பிற்கும் இடையேயுள்ள கோட்டை கூடத் தாண்டியிருக்கலாம், தங்களுடைய கரத்தை மீண்டும் ஒருபோதும் உயர்த்த விரும்பாமல், அல்லது நீர் அவர்களை அழைப்பீர் என்ற எந்த உணர்வையும் மீண்டும் ஒருபோதும் விரும்பவே விரும்பவில்லை. பிதாவே, அந்தவிதமான காரியம் இருக்குமானால், இரக்கமாயிரும் என்று நான் ஜெபிக்கிறேன்.

149 தேவனே, கர்த்தாவே, நீர் இந்த மனிதனை இரட்சிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவருடைய இருதயத்தின் ஆழத்தில் இப்பொழுதே பரலோகத்தின் சந்தோஷ மணிகள் ஒலிக்கின்றன

என்று நான் ஜெபிக்கிறேன். அந்தச் சிறு பையனும், அதே விதமாகத்தான். இதை அறிந்திருக்கிறபடியால், இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவன், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" இந்தக் கூற்றைக் கூறியிருக்கிறார். பிதாவே, அது உம்முடைய வார்த்தையாயுள்ளது, நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். அவர்கள் நித்திய ஜீவனை ஏற்றுக்கொண்டதால், அவர்களுக்கு இப்பொழுது நித்திய சந்தோஷத்தைத் தாரும். அவர்கள் ஜீவியங்களை சந்தோஷத்தினாலும், கனிகளினாலும், மகிழ்ச்சியினாலும் நிறைந்திருக்கச் செய்ய வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தாவே, இதை அருளும்.

150 நாங்கள் உமக்காகக் காத்திருக்கையில், மற்றவர்களை ஆசீர்வதியும், நாங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

56-0304 ஒரு வழியை உண்டுபண்ணுதல்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

# பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org